விசேஷ
விளம்பரத்திற்கு!

உ
சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889 ஆவணி மாதம்
28-ந் திகதி ஆரம்பமானது

[புத்தகம் — ௫௨] யாழ்ப்பாணம்:— விக்கிரம ௵ ஆனி ௴ ௨௰௧ (1940 ஜூலாய் 4 வியாழக்கிழமை) [இலக்கம் ௨௫]

விசேஷ
விளம்பரத்திற்கு!

முருகன் என் காதலன்

தலைவியின் முறையீடு

(இளஞ்சைவப் புலவர் திரு. எ. பாலசுப்பிரமணியம்
வட்டுக்கோட்டைமேற்கு)

குயிலும் வெட்கச் செய்யும் குரலினிமை வாய்ந்த கோமளமாதும், அடலேறனைய ஆண்மையுள்ள அண்ணலும் ஒருவரை ஒருவர் உவப்புடன் கண்டு காதல் கொள்ளுமாறு மாரவேள் தன் கரும்பு வில்லில் பூட்டி ஐங்கணைகளைச் செலுத்தும் அதிசௌந்தரியமான மாலைவேளை. அருணனைச் சாரதியாகக் கொண்டு ஏழு பரி பூட்டிய மணி மாகத் தேரில் ஆரோகணித்துத் தன் ஆயிரங் கிரணங்களைப் பரப்பி வந்த செஞ்சுடர்க் கதிரோன், பகல் முழுதும் பவனி வந்த ஆயாசத்தினால் தன்வலிமை சிறிது குறைந்து வெப்பந்தணிந்த மஞ்சட் கிரணங்களை அள்ளி வீசும் அலங்காரமான அந்திவேளை.

மாசற்ற மனம் விரும்பும் மாசற்ற ஆயிரம் இதழ்களையுடைய பெரிய தாமரை மலரையும், குற்றங் குறையில்லாத குமுத மலரையும் கூட்டங் கூட்டமாகவுள்ள ஓர் சிங்காரத் தடாகம். அதையடுத்து வானத்தை உராவி வளர்ந்து, கனிந்து, வானமே தோன்றா வண்ணம் இருக்கும் பல மரங்கள் நிறைந்து, தித்திப்பு உவர்ப்பு கார்ப்பு கைப்பு துவர்ப்பு புளிப்பு என்னும் அறுவகைச் சுவையினையும் ஒவ்வொரு மரத்திலும் பருக்கக் கூடிய பழங்களையுடைய பாங்கான சோலை.

தடாகத்தருகே பளிங்குக் கல்லால் பாங்குற அமைக்கப்பட்ட ஓர் அழகான மேடை. அதனில் காந்தி வீசும் இரத்தினச் சிலம்புகளும், ஒன்றிய கைவளையல்களும் அடக்க ஒடுக்கமாக இருக்க, தலைமுடியும் மருங்கும் கரிய மேகம் போலவும் கூந்தலும், வானவில்லைப் போன்ற புருவமும், கயல்மீன் போன்ற கண்களும் கொவ்வைப் பழம் போன்ற செவ்வாயும், சற்றே பருத்த தனமும் உடைய பதினெட்டு வயது மதிக்கத்தக்க எழில் நங்கை வீற்றிருக்கின்றாள். அவள் சோகம் நிரம்பியவளாகக் காணப்படுகின்றாள். குவளைமலரென்ற வண்டுகள் மொய்க்கும் செவ்வரி படர்ந்த அவள் கண்களிலிருந்து, கரியமுகிற் கூட்டத்திலிருந்து விழும் மழைபோலக் கண்ணீர் தாரை தாரையாக வடிகின்றது. பின், அவள் மனதைத் தேற்றியவளாய்க் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புலம்புகின்றாள்.

என் மனதைக் கொள்ளை கொண்ட உத்தமனான முருகனின் அன்பைப் போலச் செழித்து வளர்ந்து, அன்னவர் சிரிப்பை ஒத்த மலர்களையுடைய குளிர்ச்சி மிகுந்த சோலையே! என் இனிய மோகனக் காதலர் இங்கிருந்தால் நீங்கள் என்ன பாடுபடுவீர்கள் தெரியுமா? நான் படும் துன்பத்தைக் கண்டு இன்புறும் முல்லையே! என் ஆருயிர்க் கள்வன் இங்கு வந்தால் உன்னைப் பறித்து எனது முடியிற் சூட்டி அகமகிழ்வடைய, நீ அப்போது என்ன பாடுபடுவாய். நீ இன்னும் அவரது புகழ்ப்பிரதாபங்களை அறியவில்லைப் போலும். என் அருட் பெருங்கடல், என்னை வந்து ஆலிங்கனம் பண்ணும் பொழுது நீ என்ன கொட்டாவி விடப் போகிறாய். சற்று அடக்கமாக இரு. என்னை வருத்தாதே. நீ அன்று என் காதலரைக் கண்டாயல்லவா? எவ்வுலக மாதரும் கண்டு விரும்பும் ஒப்பற்ற அழகு வாய்ந்த, மகிமை பொருந்திய அவரை அழைத்து வந்தாயானால் நீ எனக்குச் செய்த பெரிய உபகாரங்களுள் ஒன்றாகக்கொண்டு, எனது அன்பர் மூலமாக உனக்கு ஏதாவது உதவி செய்து மனம் மகிழ்விக்கிறேன். ஓடிப்போ.

இரப்பவர் முகம் மலரும் பொருட்டு அகம் மகிழ்ந்து பொன்னை நல்கும் கன்னெஞ்சினர் போல மலர்ந்த பூங்கொத்தோடு கூடிய மாந்தளிருக்கும், காதுக்கினிய இன்பமளிக்கும் குரலையுடையாய் என்று காதலர் போற்றும் குயிலே! நீ சற்றுக் கூவுதலை யொழித்து, அன்ன நடையினளும் மாவடு வன்ன விழிகளுமுடைய உமாதேவியார் தன் குழந்தை என்று சொல்லிப் பாராட்டும் முருகனை — தேவர்கள் தலைவனை — செங்கையுடன் இலைபோன்ற வேலாயுதத்தையுடைய முருகனை — ஒப்பற்ற கிரீடத்தையும் மணி முடியினையும் தோளணிகளையும் மணித்த வீரவழகனை — அடியார்க்கு இன்று ஆலாலத் தேவர் சொரியும் அற்புதப் பாலனை — முனிவர் பணிய மிளிரும் குக குமரகுருபரனை — அழைத்தோடி வாராய். உமது தாமரை மலர் போன்ற திருமுகத்தையும், தேசு காந்தியையும், அலங்கார ரூப மயில் வாகனத்தையும், வேற்படையையும் காணாது தாகமேறி தவிப்பாய்த் தவிக்கின்றாள். ஓடோடி வாரும் என்று இந்த பொழுதே அழைத்து வா மோகனமணியே! சீக்கிரம் செல்.

ஒப்புயர்வற்ற கருணை வள்ளலான தனிப் பெருந் தலைவனே! அன்னையர் அறுவரின் [illegible] கந்தா!! [illegible] சிவனார்!!! [illegible] காந்தின [illegible] அமலனே!!!! [illegible] நினைத்த நோயைத் [illegible] ஓடோடி வாரும் குகனே! குமரா!!

கண்டோரைக் காதற் கடலில் ஆழ்த்தி விடும் மனமோகன மாரனைத் தாங்கி மயிலிலேறிப் பவனி வரும் பவனிப் பெருமானே! பச்சை மாமேனிப் பவளச்செவ்வாயே! உன் கருணை என்ன. அன்பு என்ன. இரத்தம் என்ன. நான் காயமுறு பிரிவால் கசிந்து, மெலிந்து, வாடி வதங்கிப் போயிருக்குந் தருணத்தில் எனக்கு இன்பமூட்டும் என்னைத்துடன் "வந்தேன், வந்தேன்" என்று செம்பவளவாய் திறந்து அபயங் கொடுத்தோடி வந்த என் மணியே!!! நீ, என் மறுவற்ற மனதை அடியோடு கொண்டு செல்ல அந்த அற்புதப் பொழுதை அறிவாயல்லவா? அரக்கனுக்கும் அவன் காரணமாக இவ்வுலகைச் சிருட்டித்த குகேசனென்னும் தம் தந்தையாருக்கும், மேன்மை வாய்ந்த பொதிய மலையில் வீற்றிருக்கும் தவமுடைமையும், பொறையுடைமையும் ஒப்பற்று விளங்கா நின்ற குறுமுனிவராகிய அகத்திய முனிவருக்கும் ஞானாசிரியனும் உன்னவரை அறிவாயல்லவா? அவரே என்மணாளன். என்ன? உனக்கு இன்னும் என் மணாளனைத் தெரியவில்லையா? சரி. இன்னும் அவரது புகழ்ப்பிரதாபங்களைச் சொல்லி விளக்குகின்றேன். அதன்படி தேடிச் சென்று அழைத்தோடிவா?

யாழிசை வல்லுநரான நாரத மகாமுனிவர் செய்த யாகத்தில், யாகபூஜை தவறியமையால் தண்டையுஞ் சிலம்புமணிந்த காலுடன் சினந்து உடம்பைக் குலுக்கிக் கொண்டு ஓம குண்டத்தில் தோன்றிய ஆட்டுக் கடாவைக் கண்டு தேவர்கள் ஓடவே, அவ்வாட்டுக் கடாவை இடையூறும் வராமல் அதைப் பிடித்து அதன்மீது தானே ஆரோகணித்து அகிலமெங்கும் சுற்றி வந்த வீரன். மாயம்வலைக் கொண்ட அசுரரைப் பாண்டொழித்து யாவும் மாயம் வலைபோர் செய்த வேற்படையோன். தேவர்கள் திருச் செந்தூரில் மனம் உவந்து பூஜை செய்ய ஏற்றருளிய அறுமுகப் பெருமான். பூமியிலுள்ள ஆன்மாக்கள் உடம்பை விட்டுச் செல்லும்பொழுது பிடித்திழுத்துக் கொண்டு போகும் யமனையும், எண்ண முடியாத பலவித உருவமுடைய எவ்விதக் கடின பொருட்களையும் வெந்து நீறாகும்படி செய்யும் அக்கினி தேவனையும் முத்துப் பவளம் என்பன நிறைந்துள்ள அலைகளை வீசி இறைக்கும் நீரை ஆட்சி செய்தருளும் வருண தேவனையும், மலையான வக்கிலையான பொருளையும் அசைத்தாட்டும் படியான வலிமை பெற்ற வாயு தேவனையும் சகல சிவகோடிகளின் நெஞ்சத்திலும் பெரிய புவனங்களிலும் நீங்கா அமைந்து நுண்பரப்புய சூரியனையும், தேவர்களரசனான ஆயிரங் கண்ணனையும், தண்ணளிக் கதிர் வீசும் வெண்மதிச் சந்திரனையும் முடி சாய்த்து வீழச் செய்த வணங்கா முடியோன். என் மாதவ மணியே! அவர் தங்கி நிற்கக்கூடிய இடங்களையும் சொல்லுகிறேன் கேள்.

இன்னிசை யாழினும், பண்ணிசைக் குழலினும் இனிய செஞ்சொற்கள் தம் தளர்நடைச் சிறுவன் அருகே நிற்பர். அன்பரும் இருளும் அற்ற கந்தகிரி, கைலாயகிரி முதலிய இடங்களில் தம்படியவர்களுள் செய்து கொண்டு நிற்பர். அடியவரிதய கமலங்களில் தேனூற நின்று ஒளிப்பர். அருணகிரியாரின் அருட்கவியை மெய்மறந்து ஆனந்தமாக இருப்பர். அஞ்சல் கொஞ்சு [illegible] மாதுளை வள்ளியினருகே வீற்றிருப்பர். கரிய மேகம் போன்ற கூந்தலும், மின்னல் போன்ற இடையும், குமிழம் பூவைப்போன்ற நாசியையும், செங்கமலம் போன்ற [illegible] பக்கத்தே நிற்பர். ஆகையால் நான் இங்கு படும் அவலநிலையை உன் அலங்கார வார்த்தை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

‘உலகம் அழியாமல் தடுக்க உண்மை அஹிம்ஸையினால் தான் முடியும்’

காரியக் கமிட்டியின் முடிவுபற்றி மகிழ்ச்சியும் வருத்தமும்

மாறுபாடு ஏற்பட்ட வகையை மகாத்மா விவரிக்கிறார்

தனித்திருப்பினும் அஹிம்சையை விடேன்

பம்பாய், ஜூன் 29— சமீபத்தில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றி மகாத்மா காந்தி இன்றைய ஹரிஜன் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். காரியக்கமிட்டிக்கும், தமக்கும் இடையே மாறுபாடு ஏற்பட்டிருப்பதைப்பற்றி அவர் பிரஸ்தாபித்து "இன்பமும், துன்பமும்" என்று தமது கட்டுரைக்குத் தலைப்புக் கொடுத்திருக்கிறார். "காரியக் கமிட்டியின் முடிவு கண்டு நான் சந்தோஷமுமடைகிறேன்; வருத்தமுமடைகிறேன்" என்று மகாத்மா குறிப்பிட்டுள்ளார்.

மாறுபாட்டைத் தம்மால் தாங்க முடிகிறதே என்பதில் சந்தோஷமும், [illegible] தமது வாக்கை [illegible] இப்பொழுது தமது அபிப்பிராயத்தைப் பின்பற்றி நடக்கும்படி செய்யத் தம்மால் இயலவில்லையே என்பதில் வருத்தமுமடைந்திருப்பதாக அவர் தெரிவிக்கின்றார்.

அஹிம்சா தர்மத்தைப்பற்றிக் காந்திஜீ எழுதும்போது அது காங்கிரஸின் கொள்கையே என்றும், காங்கிரஸுக்கும் தமக்குமிடையே அப்படியான விஷயங்களில் அபிப்பிராய பேதமேற்பட்டிருக்கையில் இனித் தாம் காங்கிரஸின் பொதுக் கொள்கை விஷயத்தில் வழிகாட்டுதல் இல்லையென்றும் கூறியுள்ளார்.

கட்டுரையின் விபரம்

காந்திஜீ எழுதியுள்ள கட்டுரையின் விவரம் பின்வருமாறு:—

18-ந்தேதி வெளியிட்டது

18-ந்தேதி நான் ஹரிஜன் மூலம் என்னுடைய வாதம் மனத்தில் பதிந்திருந்தால் 'பலிஷ்டர்களின் அஹிம்சையில் நமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது' என்பதை அறிவிக்கவும், ஆயுத பலத்தைக் கொண்டு நம்முடைய சுதந்திரத்தைக் காக்க நமக்கு உத்தேசமில்லையென்றும் அஹிம்சையின் பலத்தைக் கொண்டே அதைக் காப்போமென்றும் சொல்லுவதற்கும் காலம் வரவில்லையா என்று தெரிவித்தேன்.

21-ந்தேதி என்ன?

21-ந்தேதி நடந்த காரியக் கமிட்டிக் கூட்டத்திற் சமயம் நேரிட்டபொழுது மேற்கூறிய அத்தகைய நம்பிக்கையை வெளியிடக் கமிட்டி சக்தியற்றதாக இருந்தது. ஏனெனில் கமிட்டி அங்கத்தவர்களுக்கு இதற்கு முன்னர் எப்பொழுதும் இத்தகைய சோதனை ஏற்படவில்லை. இதற்கு முன் நடந்த கூட்டத்தில் உள் நாட்டுக் குழப்ப மேற்பட்டாலும் வெளி நாட்டவர் இந்தியாவைத் தாக்கினாலும் நீக்க ஒரு திட்டம் வகுக்க வேண்டியிருந்தது.

மன்றாடினேன்

"பலசாலிகளின் அஹிம்சையில் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் அதைப்பின்பற்றி நடப்பதற்கு இது தான் சரியான சமயம். பல கட்சிகள் அஹிம்சையில் அது பலசாலிகளின் அஹிம்சையாயினும்சரி பலவீனர்களின் அஹிம்சையாயினும் சரி நம்பிக்கை கொள்ளாமலிருக்கும் பாதகமில்லை. காங்கிரஸ்காரர்கள் நெருக்கடியை அஹிம்சையைக் கொண்டே சமாளிக்க வேண்டுமென்பதற்கு அதுவே ஒரு காரணமாகும். ஏனெனில், அனைவரும் அஹிம்சையை அனுஷ்டித்தால் உள்நாட்டுக் குழப்பமே ஏற்படாது; அந்நிலையில் வெளி நாட்டவர் இந்தியாவைத் தாக்குவதைச் சமாளிப்பதற்காக ஒவ்வொருவரும் ஆயுதம் தாங்குவதற்கே அவசியமிராது. அஹிம்சையில் நம்பிக்கையில்லாத கட்சிகளுக்கிடையே காங்கிரஸ்காரர்கள் அஹிம்சாக் கொடியைச் சேர்த்தவர்களாக இருப்பதால் தான் தங்கள் தர்மத்தைப் பின்பற்றி நடக்கத் தங்களுக்கும் சக்தியுண்டு என்பதை அவர்கள் காட்ட வேண்டியது அவசியமாகிறது."

என்று எடுத்துரைத்து நான் கமிட்டி அங்கத்தவர்களுடன் மன்றாடினேன்.

அங்கத்தவர்களின் அசக்தி

ஆனால், தங்களால் இவ்வாறு நடக்க முடியாதென்பதைக் கமிட்டி அங்கத்தவர்கள் உணர்ந்தனர். அது அவர்களுக்கொரு புதிய அநுபவமாக இருக்கும். இதுவரையில் இத்தகைய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு ஏற்பட்டதேயில்லை. வகுப்புக் கலவரங்களைத் தடுப்பதற்காகச் சமாதானப் படைகளை நிறுவ நான் செய்த முயற்சி அத்தனையும் வீணாகி விட்டது. ஆகவே, உத்தேசித்த பிரகாரம் நடக்க முடியுமென்பதில் அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

என் விஷயம் வேறு

என் அபிப்பிராயம் வேறு காங்கிரஸ் எப்போதும் அஹிம்சாக் கொள்கையை அநுசரித்து வந்திருக்கிறது. அக்கொள்கை சரிப்பட்டு வராவிட்டால், அதைக் கைவிடக் காங்கிரஸுக்கு உரிமை உண்டு. அதன் மூலம் ராஜீய சுதந்திரமும், பொருளாதாரச் சுதந்திரமும் கிடைக்கவில்லையானால் பயனில்லை. என் விஷயத்தில் அஹிம்சை யென்பது முதன்மையான லக்ஷியமாகும். நான் தனித்திருந்தாலும் சரி எனக்குத் துணைவர்கள் இருந்தாலுஞ் சரி அதை அநுசரித்தாக வேண்டும். என் வாழ்க்கையின் லக்ஷியமே அஹிம்சைதான். எக்காலத்தும் நான் அதை அநுஷ்டித்தேயாக வேண்டும். ஆண்டவன் முன்னிலையிலும் மக்கள் முன்னிலையிலும் எனது கொள்கையை ருஜுப்பித்துக் காட்ட இதுவே தக்க சமயம். ஆகையால் தான் என்னைத் தனியாக விட்டு விடும்படி நான் கமிட்டியைக் கேட்டுக் கொண்டேன்.

சிறந்த தியாகம்

காங்கிரஸின் பொதுவான காரியங்கள் நடப்பதற்கு இதுவரை நான் வழிகாட்டிவந்தேன். காரியக்கமிட்டி அங்கத்தினர்களுக்கும் எனக்கும் விசேஷ வித்தியாசம் ஏற்பட்டு விட்டபோது நான் முன்போல இருப்பது கூடாது. என் கருத்துச் சரியென்பதை அவர்களும் உணர்ந்தார்கள். அவர்கள் எனக்கு ஒரு வழியுங் கூறினார்கள். அவர்கள் நிலையை உணர்ந்து சரியாக நடந்து கொண்டார்கள். அவர்கள் விஷயத்திலேயே அவர்களுக்கு நம்பிக்கையில்லை. போதுமானபடி அவர்கள் அஹிம்சையை அநுஷ்டிப்பார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. ஆகவே, அவர்கள் தங்களால் செய்யக் கூடிய ஒரு காரியம் எதுவோ அதைச் செய்து முடித்தார்கள். செய்த தியாகம் சிறந்ததாகும். காங்கிரஸ் இதுவரை உலகில் அஹிம்ஸா விஷயமாக அடைந்திருந்த ஒரு நற்பெயருக் கேற்பவே அது இப்போது நடந்து கொண்டது. ஒரு கொள்கைக்காக இப்போது இருவருக்கும் வேறுபாடு ஏற்பட்டாலும் 20 வருஷங்களுக்கு அதிகமாகவிருக்கும் இந்த நட்புரிமைக்குப் பாதகம் ஏற்படவே ஏற்படாது.

இன்பமும் துன்பமும்

இது விஷயமாக எனக்கு ஒருபுறம் துக்கமும் இன்னொருபுறம் களிப்பும் ஏற்படுகிறது.

நான் தனித்திருக்கக் கூடிய ஒரு கஷ்டத்தைத் தாங்க, ஆற்றல் பெய்திருப்பதுபற்றிச் சந்தோஷம். இத்தனை வருஷங்களாக என் வார்த்தைக்கிருந்த ஒரு சக்தி இப்போது போய்விடுவதாகத் தோற்றுகிறதே, அதற்காக வருத்தம், பல வருஷங்களாக அவர்களையும் என்னுடன் அழைத்துச் செல்லக்கூடிய பாக்கியம் எனக்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

சிவமயம்

[ர. சண்முகசுந்தரஞ்செட்டியார்]

சிவமயம் எனும் மொழி இரண்டு சொற்களாலாக்கப்பட்ட ஒரு தொடர் மொழி. 'சிவ' என்றும், 'மயம்' என்றும் பிரிக்க வியலும். 'மயம்' எனும் பதம் 'மய' வென்று வடமொழியில் கூறப்படுவது. அது 'செய்யப்பட்ட', 'நிறைந்த' என்னும் பொருள்களைத் தருகின்றது. நீலகண்ட பாஷ்யத்துள் 'பிரமம் ஆனந்தமயம்' என்றவிடத்து, சிவபெருமான் ஆனந்தத்தை மிகுதியுமுடையவர் என்று கூறப்பட்டுள்ளது. எனவே சிவமயம் என்னும் சொற்கு, சிவத்தால் செய்யப்பட்டது என்றும், சிவம் நிறைந்தது என்றும், சிவம் மிகுதியுமுடையது என்றும் பொருள் போதருமாறு காண்க. இவ்வாறு கொள்ளுங்கால் சிவத்தால் செய்யப்பட்டதும், சிவம் நிறைந்ததும், சிவத்தை மிகுதியுமுடையதுமான பொருள் யாதோ வென ஆசங்கை நிகழுமன்றோ! அப்பொருளே உலகமாம். உலகம் எவ்வாறு சிவத்தால் செய்யப்பட்டது, எவ்வாறு சிவம் நிறைந்து நின்றது, எவ்வாறு சிவத்தை மிகுதியுமுடையது என்பனவற்றை விவரிப்பதே இக்கட்டுரையின் பொருளாகும்.

ஒருவினை தொடங்குங்கால் முன்னை ஒரு பிள்ளையார் சுழியிட்டுப் பின் சிவமயம் என்று எழுதி, மேலும் பின்னர் அம்முயற்சிக்கு வேண்டுவனவற்றை எழுதுவது உலக வழக்கு. அவ்வாறு எழுதுவதால் அவ்வினைக்குக் கருத்தா இறைவனே; அவனைச் சிந்தித்துச் செயப்புகும் வினை அவனது வினையே; தன்வினையன்று என்றெண்ணிச் செய்வதே யாகும். இறைவனது வினை எவ்வாறு ஆகுமெனின், உலகம் சிவத்தால் செய்யப்பட்டதாய், சிவனால் நிறைந்ததாய், சிவத்தை மிகுதியுமுடையதாய்க் காணப்படுகின்றமையான் ஆகும்.

ஈண்டு உலகம் என்றது இயங்கியற் பொருளையும், நிலையியற் பொருளையும் குறித்தது. முன்னது அவன், அவள், அது எனச் சுட்டியறியப்படுவதாய் அவயப் பகுப்புடையன. இவ்வாறு சுட்டியறியப்படுவன வெல்லாம் தோன்றி நின்றழிதலைக் காண்பது ஒருதலை; தோன்றி நின்றழிதலினால் இவ்விருவகைப் பொருளும் உண்டாக்கப்படுவன என்று பெறப்படும். எனவே இம்முவினைகளைச் செய்பவனான கருத்தா ஒருவனுண்டு என்பது நிச்சயமாகின்றது. இவ்விருவகைப் பொருளையுடைய உலகம் விசித்திரத் தன்மையுடையதாகலின் இது ஒரு கருத்தாவால் ஆக்கப்படுவதன்று பல கருத்தாக்கள் இன்றியமையாது வேண்டப்படும் எனின், ஒரு தேர் செய்யுங் காலத்துப் பலர் அத்தொழிலில் முயன்று நிற்பினும் அவர்கள் யாவரும் ஒருவன் ஏவல் வழி நடக்கின்றமையால் ஏவுவோனான ஒருவனாலே அத்தேர் செய்யப்பட்டது என்ற கருத்துக் கூடுகின்றது. பல கருத்தாக்கள் இவ்வுலகத்து யாங்கினும் அவர்கள் ஒரு கருத்தாவின் ஏவல் வழி நின்றமையால் அத்தன்மை வசித்த கருத்தாவினால் உலகம் ஆக்கப்பட்டதெனக் கருதாகக் கொள்க. அத்தன்மை வசித்த கருத்தாவே சிவபெருமானாவார். மற்றைக் கடவுளர் அத்தன்மை வசிக்க வன்மையுடையோரல்லர். அவர்கள் யாவரும் சிறுநெறித் தெய்வங்களாய்ச் சில்லாண்டிற் சிதையப் படுபவர்கள்.. என்றும் இறவாதவன் சிவனொருவனே. சிலப்பதிகாரத்துள் 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்' எனக் கூறியது காண்க. 'நூறுகோடி பிரமர்கள் நுங்கினர், ஆறுகோடி நாராயண ரங்ஙனே, ஏறுகங்கை மணலெண்ணி லிந்திரர், ஈறிலாதவன் ஈசனொருவனே' என்றும், "யாதோர் தேவரெனப்படு வார்க்கெலாம், மாதேவன்னலால் தேவர் மற்றில்லையே' என்றும், 'தொழப்படுந் தேவர் தொழப்படுவானை' என்றும் அப்பமூர்த்திகள் குறித்தமை யறிக. தேவர்கள் யாவரும் உயிர் வருக்கத்தில் அமைவாராகலின் அவர்கட்குத் தோற்றமும் இறுதியும் பெறப்பட்டது. அவர்களும் மூலமத்தி னெறிச் சங்கார காரணனாயுள்ள சிவபெருமானிடத்துக் கிடந்து வினைக்குத்தக மீண்டும் பிறவியைப் பெறுவர். சங்கார காரணனாயுள்ள இறைவனைச் சிவன் என்பதேனெனின் சி என்னும் தாது கிடத்தலெனப் பொருள்படுதலின் இறுதிக் காலத்து உலகமெல்லாம் தம்மிடத்து ஒடுங்கிக் கிடத்தலினாலும், சற்சனங்களுடைய மனங்கள் தம்பால் கிடத்தலினாலும், சி என்னும் தாது மெலிவித்தலெனவும், கூர்மித்தலெனவும் பொருள்படுமாதலான் ஆன்மாக்களின் பாசசத்தியை மெலிவித்துச் சிற்சத்தியைக் கூர்மித்தலினாலும், காந்தி பொருட்டாம் வசி என்னுஞ் சொல் வர்ண விபரீய முறையினாலும் இறைவனை ஆன்றோர் சிவன் என்றனர். சிவன், அமங்கலமாகும், பிறந்திறக்கும் தன்மையுடையவனல்லனாதலின் மங்கலம் என்னும் பொருண்மை சிவன் எனும் மொழிக்கு ஒத்ததாம். இது காறும் உலகம் செய்யப்பட்டதென்றும் அதனைச் செய்வித்தவன் சிவன் என்றும் விவரிக்கப்பட்டது. இனி உலகம் சிவத்தால் எவ்வாறு நிறைந்தது என்று ஆராய்வாம்.

முன்னர்க் குறித்தபடி உலகம் இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளும் என இருவகைப்படும். இவ்விரு பகுதியும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், நிலா, பகலோன், ஆன்மா என்னும் எட்டுப் பேதமாய் விரியும். இவையே அட்டமூர்த்தமென்றும், சிவபெருமான் திருமேனிகளெனவும் வேதாகமங்கள் சிறப்புறப் பேசும். எனவே சிவனுடைய நிலைவு பெறப்பட்டது. 'இவற்றினுள்ளும் புறம்பும் சிவன் கலந்து நிற்றலால் அவைகள் வியாப்தி வியாப்பியப் பொருள்களும், அவர் வியாபகப் பொருளுமாதல் சாலும். இதனால் வியாபகத்துக்கிடமாகிய பொருள்களும் வியாபிக்கும் பொருளும் ஒரு பொருளாகா வாம்; சரம், அசரம் எனப்போந்த வியாபகதானப் பொருள்கள் வியாத்தி வியாப்பியங்களாய்ச் சதசத்தும், அசத்துமாய் விளங்கலான், அவ்விரண்டுமே பொருபொருளாதல் செல்லாதாம். இங்ஙனமாகக் கேவலம் சத்தாகிய வியாபகப் பொருள் களாத லெங்ஙனங் கூடும்! மூன்றும் விஜாதிப் பொருள்களாத லுண்மையால், 'வியாபகமாகி விரிந்தங்கலை, வியாபக மேனி நிறைவாதெனப், வியாத்தி சமநிறைவாகும் நிலைமையின், வியாப்பியமொன்றின் படைத்த நிறைவே என வரும் திருவாக்கினைச் சிந்தித்தல் வேண்டும்." இத்தகைய வியாபகத்தன்மை சிவன் அட்டமூர்த்தமாய் நின்ற நிலைமையில் பேசப்பட்டது. இது சைவமொன்றற்கே யுரிமையுடைய தென்னலாம். சிவன் எனும் சொல் வியாபகப் பொருண்மையுடைய தல்லதாதலின், சிவன் வியாபகப் பொருள் ஆகமாட்டானென்று மறுத்து வியாபகப் பொருண்மையுடைய விட்டுணு மொழியால் குறிக்கப்படும் கடவுளாகிய விட்டுணு மூர்த்தியே வியாபகப் பொருள் என்பார் களாயின் சிவனார் திருவிளையாடல்களும் விட்டுணு மூர்த்தியின் நிலைகளும் சிந்திக்கற்பாலன.

—வரும்

—சிவநேசன்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

யாழ்ப்பாணம் விக்கிரம ஞு ஆனிமீ உசுவ. வியாழக்கிழமை

இந்து சாதனம்.

ஜப்பான் கொண்ட கோலம்

நீடித்த காலமாகப் பிருத்தானியருடன் நட்புப் பூண்டிருந்த ஜப்பானியர் பொல்லாத காலத்திலும் போலும் இப்பொழுது பிருத்தானியருடன் மாறுபட்டு பிருத்தானியரின் பகையரசர்களுடன் சேர்ந்து நிற்கின்றனர். முந்திய யுத்தத்திலே பிருத்தானியருக்குத் துணையாக நின்று பிருத்தானிய கிழக்குச் சக்கராதிபத்தியமாகிய இந்தியா முதலிய நாடுகளைப் பாதுகாத்து வந்தது யப்பானென்றால் மிகையாகாது. அப்படிப்பட்ட யப்பானியர் பின்னர் பிருத்தானியருடன் மாறுபட்டமைக்குக் காரணர் பிருத்தானியரோ இல்லையேல் யப்பானியர் தாமோ என்பது ஒரு ஆசங்கை. யப்பானியர் பிருத்தானியரை இயன்றவரையில் வேண்டியே நடத்தவர்களென்றும், பிருத்தானியர் காலகதியில் யப்பானியரை அலட்சியஞ் செய்து யப்பானியரின் மாற்றாராகிய அமெரிக்கருடன் அதிக நட்புப் பூண்டனரென்றும், அவ்வளவோடு நின்றுவிடாது யப்பானிய பொருள்களைத் தம் சக்கிராதிபத்தியத்திற் கொண்டு வந்து இறக்கி வியாபாரஞ் செய்வதில் பிருத்தானியர் அதிக கட்டுப்பாடு செய்தனரென்றும் புறக்கணித்தனரென்றும் விஷயமறிந்தோர் சொல்லுகிறார்கள். அவ்வளவில் மாத்திரமல்லாமல் யப்பான் முந்திய யுத்தத்திற் செய்த நன்றியை மறந்த தோஷத்தையும் பிருத்தானியர்மீது சுமத்துகின்றார்கள் காரியமறிந்தோர்.

"நாடி நமரென்று நன்கு புறந் தந்தார்க்குக்
கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப, நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்"

என்றாங்கு, தமக்கு இன்றியமையாத் துணையாகவிருந்த யப்பானியரை, பிருத்தானியர் அமெரிக்கரை நம்பிப் புறக்கணித்தமையி னாலேயே யப்பானியர் பிருத்தானியருக்கு இச்சமயத்தில் துணை புரிதலை விட்டு அவர்க்கு மாறாக ஜர்மனியருடன் சேர்ந்து போர்புரிய முற்படலாயினர். பிருத்தானியர், துணையென நம்பியிருந்த அமெரிக்கர் இந்த ஆபத்தான நேரத்தில் அவர்கட்குப் படைத்துணையாக முற்பட்டு வருதற்குப் பின்னிற்கின்றனர்.

இங்ஙனமாக, ஊசி புகுத்த இடங்கிடைத்தால் அந்தஇடத்தில் உலக்கையைப் புகுத்த வல்ல ஹிட்லர் யப்பானியருக்கும் பிருத்தானியருக்கு மிடையே ஏற்பட்ட பிளவைக் கண்டாற் சும்மாவருப்பாரா? இருசாதியார்க்குமிடையே ஏற்பட்ட விபரீதத்தை உணர்ந்த ஹிட்லர் பின்வரக்கூடிய உதவியையும் நன்மையையும் யோசித்து அந்த நாட்டொடக்கம் யப்பானியரைத் தம்பக்கல் "வளைத்து" அவர்களுடன் கூட்டுறவு பூண்டுகொண்டார். இப்பொழுது பிரான்ஸிய சமாதானத்தில், ஹிட்லர் பிரான்ஸியுத்தத்திற் சிறிதும் சம்பந்தப்படாத துணைபுரியாத யப்பானியருக்கு, அதிகிழக்கே பிரான்ஸியருக்குரிய சில நாடுகளையும், பஸிபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகளையும், பிரதானமாகப் பிரான்ஸிய இந்து-சீனத்தையும் பங்கிட்டுக் கொடுக்க நிச்சயித்துநிற்கின்றாராம். இப்படியானால் ஜர்மனிய யப்பானிய ஐக்கியம் இப்போதைக்கு நின்று பிடிக்குமென்பதிற் சந்தேகமென்ன?

இதுகாறும் அகத்திற் பகைமைபூண்டு புறத்தே நட்புப் பாராட்டி வந்த யப்பானியர் தாம் பிருத்தானியருடன் மாறுபட்டுப் போர்செய்யத் துணிவதற்குச் சிலஞாயங்களை யெடுத்துக் காட்டுகின்றனர். அவர்கள் சொல்லும் நியாயத்திற் பிரதானமானவை, யப்பானியருக்குப் பெரும்பகைவராயுள்ள சீன சேனாபதியாகிய மார்ஷல் செயிங்கேஷய்க் என்பவருக்குப் பிருத்தானியர் படைக்கல உதவி செய்கின்றார்களென்பது ஒன்றாகும். யப்பானிய சைநியங்களின் மர்மங்களையும் சஞ்சாரத்தையும் பிருத்தானியர் சீனருக்கு உளவு சொல்லுகிறார்களென்பது மற்றொன்றாகும். பிருத்தானியர் மீது யப்பானியர் காட்டுந் தவறு ஞாயமானதோ அல்லவோ என்பதை நாம் விளங்கிச் சொல்லுதல் முடியாதாம். எவ்வாற்றானும் பிருத்தானியருடன் ஜப்பானியர் மாறுபட்டுச் சமர்புரிய நினைப்பது முறையல்ல.

றப்பர் பயிரிட அரசாங்கத் திட்டம்

குடியானவர்களுக்குக் காணிகள் ஒதுக்கப்படும்

கேகாலை டிஸ்திரிக்கில் அரசாங்கம் கைப்பற்றியுள்ள தோட்டங்களில் அரசாங்கத்தாரே றப்பர் பயிரிடப்போகிறார்கள். குறித்த தோட்டங்களிற் குறித்த பகுதிகளைக் குடியானவர்களுக்கு ஒதுக்கிவிட்டு றப்பர் பயிரிடும்படி சொல்வதுதான் அரசாங்கத்தின் உத்தேசமாகும்.

குறித்த தோட்டங்கள் இருக்கும் பகுதி மேடான பிரதேசமாதலால் றப்பர் பயிரிடுவதற்குத் தக்கஸ்தலமென்றும் கருதப்படுகிறது. குடியானவர்களுக்குக் காணிகளை விட்டுக் கொடுத்து றப்பர் பயிரிடச் செய்யும் இத்திட்டத்தின்கீழ் முதன் முதலில் உருமிதேனிஅரநாயகரே என்ற இரு தோட்டங்களை அரசாங்கத்தார் கைப்பற்றிக் கொள்வார்களெனத் தெரிகிறது.

திங்கட் கிழமை சுப்பிறீம்கோடு ஆரம்பம்

13 வழக்குகள்வரை விசாரிக்கப்படும்

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு வருகிற திங்கட்கிழமை (8-7-40) காலைதொடங்கும். இப்போது எல்லாமாய் ஐந்துவழக்குகள் விசாரணைக்கு இருக்கின்றன. இவற்றுள் ஒன்று கொலைவழக்கு. மற்றைய நான்கினுள் இரண்டு கொலைஎத்தன வழக்குகளும் கைபிழைபாடாய்க் கொலை செய்த வழக்கும் பெண்ணைக்கற்பழித்த வழக்குமாகும். இவ்வைந்து வழக்குகளையும் விட இம்முறை விசாரணைக்குரிய டாப்பில் இன்னும் 8 வழக்குகள் சேர்க்கப்படுமென அறிகிறோம்.

ா. கி

வீடுடைத்துத் திருடினதாக

முதலாம்எதிரிக்கு 18மாதம் 2ம் எதிரிக்கு ஆறு மாதம்

2-7-40
யாழ்ப்பாணம்

சிவியாதெருவில் வசிக்கும் A. M. புதாஷ் என்பவருடைய வீட்டை உடைத்து ரூபா 35-50 சதம் பெறுமதியான சாமான்களைக் களவாடினதாகக் காட்லின் கர்ணேலின் என்பவன்மீது குற்றஞ்சாட்டப்பட்டதும் கட்லின் கர்ணேலின் என்பவனுக்கு வேலைப்பின்னை இராமசுவாமியுமாக மேற்கூறிய களவாடப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாயும் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்குவிசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு முதலாம் எதிரியாகிய கர்ணேலின் என்பவனுக்கு பதினெட்டுமாதக் கடூழிய மறியற்றண்டனையும் இரண்டா மெதிரியாகிய இராமசாமிக்கு ஆறுமாதக்கடூழிய மறியற்றண்டனையும் விதித்தார்.

ஈ. கி

திருநெல்வேலியில் மண்வெட்டிப் பிரயோகம்

எதிரிமீது வழக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வசிக்கும் (1) விசுவநாதர்-முத்து (2) விசுவநாதர்-கதிரவேலு (3) நாகமணியர்-விசுவநாதர் ஆகியவரும் முதலாம் எதிரி விஜயசித்தம்பி-சக்கரதபிள்ளைக்கு மணவெட்டியால் அடித்துக் காயமுண்டாக்கியதாயும் இரண்டாம் மூன்றும் எதிரிகள் அவருக்குப் பொல்லாலடித்துக் காயமுண்டாக்கியதாயுங் குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் பொலிசார் ஒரு வழக்கைத் தொடர்ந்தனர். இதைவிடத் திருநெல்வேலியில் வசிக்கும் விஜயசித்தம்பி சக்கரதபிள்ளையும் இலகுமியுமாக முத்துவுக்கும் கதிரவேலுவுக்கும் முறையே கோடரியாலும் கத்தியாலும் காயமுண்டாக்கியதாயும் பிறிதோர் வழக்கையும் பொலிசார் தொடர்ந்தனர். இவ்விரு வழக்குகளிலும் காயமடைந்தோர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். கோட்டிற்கு வந்த எதிரிகள் பிணையில் விடப்பட்டனர். மேல் விசாரணைக்காக வழக்கு வருகிற 18-7-40ந் திகதிக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

ந கி

கத்திக்குத்து வழக்கு

எதிரிக்கு மோதக் கடூழியம்

3-7-40

யாழ்ப்பாணம் மார்டின் றோட்டில வசிக்கும் மாதன்-சின்னட்டியன் மூலவையில் வசிக்கும் கந்தன் சின்னவனுக்கு ஓர் கத்தியாற் குத்திக் காய முண்டாக்கியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்குப் பொலிஸ் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ஆறுமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். எதிரி முன்னும் ஐந்துமுறை குற்றப்பட்டிருக்கான்.

க-தி

சிரியாவிலுள்ள போலிஷ்படைகள்

பாலஸ்தீனப் பிருத்தானிய இராணுவத்தோடு சேர்ந்தன

லண்டன் ஜுன் 29 உ

சிரியாவிலிருந்து வந்த போலிஷ் பட்டாளம் பாலஸ்தீனத்திலுள்ள பிருத்தானிய படைகளோடு சேர்ந்துவிட்டது? லண்டனில் இருக்கும் போலிஷ் அரசாங்கத்தின் சார்பாகப் பிருத்தானிய தகவல் இலாகா அறிவிக்கின்றது

600 போலிஷ் துருப்புகள் சகல யுத்த தளவாடங்களோடும் எல்லையைக்கடந்து பாலஸ்தீனத்துக்கு வந்துவிட்டதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் அறிவிக்கின்றன.

பிரஞ்சுத் தளபதி ஜெனறல் மிட்ஹாஸர் போர்டோலிலுள்ள பெற்றேயின் அரசாங்கத்தோடு சேர்ந்து கொள்ளுவரென்று தெரிந்ததும் போலிஷ் படைகளின் தளபதியாகிய ஜெனறல் சிங்கோர்ஸ்கி சிரியாவிலுள்ள போலிஷ் பட்டாளத்தைப் பாலஸ்தீனத்திலுள்ள பிருத்தானிய படைகளோடு சேர்ந்து விடும்படி உத்தரவிட்டார்.

தக்க சமயத்தில் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாற்றான் சிரியாவிலுள்ள போலிஷ் படைகள் ஆயுதப்பரிஹாரணஞ் செய்யப்படாமல் தடுக்க முடியாது.

வேலை நிறுத்தஞ் செய்தமாணவர்கள்

ஆயுர் வேதக்கல்லூரியில் மீண்டும் சேர்க்கப்படலாம்

அண்மையில் வேலை நிறுத்தஞ் செய்த ஆயுர்வேதக்கல்லூரி மாணவர்களெல்லாரும் திரும்பவும் அக்கல்லூரியிற் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்று தெரிகிறது.

ஆயின், குறித்த மாணவர்கள் ஜூலை 8 ம் திகதிக்குள்ளாக மீளவும் தங்களைச் சேர்த்துக்கொள்ளும்படி மனுச்செய்து கொள்ள வேண்டுமென்றும் அதற்சப்பால் அனுப்பப்படும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டாவென்றும் சென்ற வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற சுதேச வைத்திய அதிகாரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது. வேலை நிறுத்தஞ் செய்த மாணவர்களைத் திரும்ப அனுமதிப்பதற்குச் சில நிபந்தனைகள் குறிப்பிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. அவர்களில் எவரும் மனுச்செய்து கொள்ளாவிட்டால் அந்தவகுப்பைப் புதிய மாணவர்களோடு புதிதாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமென்றுந் தெரியவருகிறது.

தந்திச் சமாசாரம்

பிரான்சியர்சமாதான விஷயமாக ஹிட்லர் தெரிவிக்கும் பிரதான நிபந்தனைகள்

ஹிட்லரும் முசோலினியும் சேர்ந்து பிரான்சியர்மீது விதித்துள்ள சமாதான நிபந்தனைகளுட் பிரதானமானவை சில இப்பொழுது அறியக் கிடக்கின்றன. இவை றோமை நகர் வாயிலாக வெளிவந்துள்ளனவாம்.

1 ஜர்மனியருக்குப் பிரான்சிலுள்ள அல்ஸாஸ் லோறேன் என்னும் இரு மாகாணங்களையும் பிரான்சியருக்குரிய குடியேற்ற நாடுகளிற் பிரதான சில பாகங்களையும் பிரான்சியா கொடுத்துவிடல் வேண்டுமே.

2 நைஸ், ஸவோய், கோர்சிக்கா, அல்ஜீரியாவில் ஒருபாகம், பிரான்சிய ஸோமாலிலாண்ட், பிரான்சியருக்கு ஆபிரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகளிற் சிலபாகம் ஆகிய இவைகளையும் பிரான்சியா முசோலினியிடம் ஒப்புவித்து விடவேண்டும்.

3 பிரான்சிய மொறக்கோவில் ஒரு பகுதியையும் பாஸ்குவியென்னும் நாட்டின் ஒரு பகுதியையும் பிரான்சியர் ஸ்பானிய நாட்டினர்க்குக் கொடுத்து விடல் வேண்டும்.

4 சீனாத்தேசத்திலும் பஸிபிக்சமுத்திரத்திலும் பிரான்சியருக்குரியனவாகவுள்ள சில ஊர்களையும் தீவுகளையும் பிரதானமாகப் பிரான்சிய இந்து சீனத்தையும் பிரான்சியா ஜப்பானியருக்குக் கொடுத்து விடல் வேண்டும்.

5 ஜர்மனியருடன் பெல்சிய அரசராகிய லியபோல் II சையெ உடம்படிக்கை யொன்று செய்து கொள்ளும் பட்சத்தில் பிரான்சிய கால்வாயிலுள்ள துறைமுகங்கள் சிலவற்றைப் பிரான்சியர் பெல்சிய அரசினர்க்கு அளித்து விடல் வேண்டும்.

மேலும் பிருத்தானியரையும் இந்த நிபந்தனைகளுக்கு இசையச் செய்ய வேண்டு மென்பதாக. கிட்லரின் நோக்கம். பிருத்தானியர் பயப்படுவரென நினைத்து "முதல் வாரத்தில் பிரான்சிய உவாயினை நாங்கள் பிரான்சிலிருந்து பிடிப்போம், அடுத்த வாரத்தில் [illegible] லண்டனிலிருந்து பிடிப்போம்" என்று ஹிட்லர் வெருட்டுகின்றாராம்.

கால்வாயிலுள்ள தீவுகளை ஜர்மனியர் கைப்பற்றினமை

பிருத்தானியாவைத் தாக்குதற்கான உபாயங்கள்

கால்வாயிலுள்ள ஜர்ஸி, ஜேன்ஸி, என்னுந் தீவுகளில் ஜர்மனியர் வந்திறங்கி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிருத்தானியாவிற்கும் குறித்த தீவுகளுக்கு மிடையேயுள்ள தந்திக்கம்பிகள் வெட்டப்பட்டமையினால் பிந்திய விபரங்களை அறிய முடியாமலிருக்கின்றது. ஜர்மனிய கடற்படை மூலமாகத்தானும் இந்த இரண்டு தீவுகளுங் கைப்பற்றப்பட்டன. ஜர்மனியில் நடந்த யுத்தத்தில் 2 பிருத்தானிய ஆகாய விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டனவாம். குறித்த தீவுகளுக்கணித்தாகப் பிரான்சிலுள்ள தானங்கள் இப்பொழுது ஜர்மனியர்வசம் இருப்பதால், அத் தீவுகளிலிருந்த பிருத்தானிய ராணுவத்தை அதிகாரிகள் முற்றாக இங்கிலாந்திற்கு அகற்றி விட்டனர். இந்த இரண்டு தீவுகளும் பிருத்தானியருக்கு உரியவை. பிரான்சின் வடமேற்கரையில் 10 மைல் தொடக்கம் 30 மைல வரையுள்ள தூரத்தில் இருப்பன. ஜேர்ஸியின் பரப்பு 28717 ஏக்கராகும். ஜேன்ஸியின் பரப்பு 15654 ஏக்கராகும்.

பிருத்தனி தொடக்கம் நார்வே வரையிலுள்ள அத்திலாந்திக் கடலோரத்திலே பிருத்தானியருக்கு மாறாகக் கடல் யுத்தஞ் செய்தற்கான ஆயத்தங்களையெல்லாம் ஜர்மனியர் செய்திருப்பதாக ஜர்மனிய பத்திரிகையொன்று தெரிவிக்கின்றது.

டோவர் சலசந்தியிற் பெரும் யுத்தம் நடைபெறுமென்றும் அந்த யுத்தத்தில் [illegible] ஜர்மனிய [illegible] யப்படை மேலும் ஏககாலத்தில் உபயோகிக்கப்படுமென்றும் கடற்படைத் தலைவராகிய அட்மிறல் லியுற்லோ என்பவர் சொல்லுகிறார்.

பிருத்தானியரை அற்பமாக மதித்து அலட்சியமாக யுத்தஞ் செய்வது புத்தியல்லவென்றும், பிருத்தானியரை அதிக படைவலியோடு தான் அடிக்க முடியுமென்றும் ஒரு ஜர்மனிய பத்திரிகை எச்சரிக்கின்றதாம்.

பிரதம குருவானவரின் உபதேசம்

[illegible], கன்றபெரி யென்னும் பட்டினக்கரிய பிரதம குருவாயுள்ளவர் சனங்களுக்குப் பின்வருமாறு தெரிவிக்கின்றார்;—

"பகைவர் எங்கள் நாட்டின் வாசலில் வந்து விட்டார்கள்; எங்களுக்கு முன்னெருபோதும் நேராத சோதனைக்காலம் நேர்ந்திருக்கிறது; இந்தச் சோதனைக் காலங்களை எப்படி எதிர்த்து நிற்கலாமென்பதை யிட்டே யோசிக்க வேண்டும். சனங்களெல்லாரும் ஐக்கியப்பட்டு நிற்க வேண்டும்; கப்பற்காரர் போர்வீரர் ஆகாயப்படையினர் கரிச் சுரங்கம் கப்பல் நிற்கும் துறைமுகம் தொழிற்சாலை யென்னுமிவைகளில் வேலை செய்வோர் ஆகிய எல்லாரும் தைரியத்தை விடாமல் இருக்கவேண்டும்; தெய்வத்தில் நம்பிக்கை வைத்து அவரை மத்தியானத்திலாதல் தியானித்துச் செபம் பண்ணவேண்டும். தெய்வ விசுவாசமும் தெய்வ உதவியுமே பெருந் துணையாகவுள்ளன"

பிருத்தானியாவின்மீது பகைவரின் முயற்சி

பகைவருக்குரிய ஆகாய விமானம் சிதைந்து கடலுள் வந்து வீழ்ந்தது. அதிலுள்ளவர்கள் 4 பேர் அங்கு நின்ற கப்பலால் மீட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். அங்கால்வருட் காயமடைந்த ஒருவன் வைத்தியசாலைக்குக் கொண்டுபோய்ச் சிகிச்சை செய்யப் படுகின்றான். வேறொரு ஆகாய விமானம் இங்கிலாந்தின் வடகிழக்கரையிற் சுட்டுவீழ்த்தப் பட்டது.

மார்ஸல் கிறஸியானி

மாண்டுபோன மார்ஷல் பால்போவினிடத்திற்கு [illegible] மார்ஸல் கிறஸியானி நியமிக்கப் பட்டார்.

ருஷியர் தம் கடற்படையைப் பாராட்டல்

சப்மறின் கப்பல் விஷயத்திலே தங்களுக்கு உலகத்தில் வேறு எவரும் ஒப்பல்லரென்றும் ஏனைய கடற்படைகளையும் விரைவில் மேலான நிலையில் வைப்பதற்குத் தாம் முயற்சிப்பதாக ருஷியர் தெரிவிக்கின்றனர்.

சிங்கப்பூர்-மலாய்நாட்டில் பாதுகாப்பு

அதி கிழக்குத் தேசங்களில் இப்பொழுதுள்ள நிலைமை யுத்தம் மூளுதற் கேதுவான தென்ற எண்ணத்தினால் சிங்கப்பூர் பிறும் மலேயா என்னும் நாடுகள் அரண் செய்யப்படுகின்றன. ஆனாலும் விரைவில் யுத்தம் வருமெனப் பயப்படவேண்டியதில்லையென மேலதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

ஹொங்கொங்நாட்டைவிட்டு அகலுதல்

ஹொங்கொங்கிலிருந்து இரண்டாயிரம்பேர்வரையில் மனிலாவிற்கும் பாக்கியோவிற்கும் [illegible] புறப்பட்டுவிட்டார்களாம்.

ஜர்மனிய விமானங்கள் சுடப்பட்டமை

பிரான்சிற்கு மேலாகப் பறந்து சென்ற 17 ஜர்மனிய ஆகாய விமானங்களுள் 5 விமானங்கள் பிருத்தானியராற் சுட்டு வீழ்த்தப் பட்டனவாம், 7 விமானங்கள் சிதைக்கப்பட்டனவாம். மிகுதி 5 விமானங்கள் அதிக சேதமின்றிப் பறந்து தப்பியனவாம்.

அயர்லாந்துக்கடலில் ஜர்மனியசப்மறின்கள்

அயர்லாந்தின் தென்மேற்கரையில் 500 மைல் தூரத்தில் எம்பயச் ரோனக்கன் என்னும் பிருத்தானிய கப்பல் தாக்கிக் கடலுள் அமிழ்த்தப் பட்டது. அக்கப்பலிலிருந்து தப்பினோர் 31 பேர் கரைசேர்க்கப் பட்டனர். 4 பேர் மாண்டனர். பிருத்தானிய வேறும் இரு கப்பல்கள் தாக்கப் பட்டனவென்றும் அவை சிதைவுற்றனவென்றுஞ் சொல்லப்படுகின்றது.

மந்திரிசபைக் கொள்கை பற்றிக் கண்டனம்

தொழிலாளர் வருகைத்தடைக்குக் காரணமாம்

கண்டித் தோட்டத் துரையின் சொற்பொழிவு

கண்டி, ஜூன், 30—

கண்டி டிஸ்திரிக் தோட்டத்துரைமார் சங்கத்தின் பொதுக் கூட்டம் நேற்றுக் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அப்பொழுது சங்கத்தலைவர் திரு. ஆர். ஸி. டாக்கெட்டி பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.-

"சட்டத்தின் சக்தியைப்பற்றி நாம் எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோம். கடைசியாக அந்தச் சட்டம் சமசமாஜத் தலைவர்களைப் பக[illegible] கைதிகளாக்கி விட்டது. ஆயின், இந்தத் தலைவர்களின் புரட்சிகரமான வேலைகளும் சாதகமில்லாமான பிரசாரங்களும் மேற்படித் தோட்டங்களிற் பெருங் குழப்பங்களையும் வேலை நிறுத்தங்களையும் விளைவித்தனதைப் பார்த்துக் கொண்டிருந்த பிறகே இப்பொழுது அவர்கள் கடைசியாகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்தச் சமயத்திலும் மேற்படி நடவடிக்கையை எடுத்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்தார் முன்வராததால் தோட்டத் துரைமார் தாமே விசேஷ அதிகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

தேயிலை றப்பர்த் தொழில்

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்தே தேயிலை றப்பர்த் தொழில்களை அத்தியாவசியத் தொழில்களாக அரசாங்கத்தார் பிரகடனஞ் செய்திருக்கலாம். தோட்டங்களில் தொழிலாளர் குழப்பமாகவும் வராமற்றிருக்கலாம். அச்சமயம் இங்கிலாந்துக்கும் [illegible] தேயிலையை ஏற்றுமதி செய்திருக்கலாம். இப்பொழுது பிருத்தானிய படைகளுக்கும் பிருத்தானிய ஆயுதத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கும் தேயிலை அதிகம் தேவைப்படுகிறது. ஆயின், இலங்கை அரசாங்கத்தார் [illegible] இந்த இருபெரும் தொழில்களையும் அத்தியாவசியத் தொ[illegible] [illegible]

தோட்டக் குழப்ப நிலைமை

தோட்டங்களில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட சில தொழிலாளர் [illegible] சம்பந்தமான [illegible] இந்தச் சமசமாஜ [illegible] பற்றிய விபரங்கள் பத்திரிகைகளிலும் வெளியாகி இருக்கின்றன. அதன் பின், தோட்டங்களில் வேலை நிறுத்தச் சம்பவங்களையும் அதிகம் காணோம். தொழிலாளர்களிடையே கிளர்ச்சிகள் செய்து வந்தவர்களும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டு விட்டனர். ஆகவே, இனித் தோட்டங்களிற் [illegible] நிலைமை ஏற்படுமென்று எதிர்பார்க்கலாம்.

இந்திய அரசாங்கத்தின் தடை

தொழிலாளர் வருகைக்கு இந்திய அரசாங்கம் விதித்த தடை இன்னும் முன்னிருந்தபடியே இருந்து வருகின்றது. இன்னும் இத்தடையைத் தீவிரமாக இந்திய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கு மிடையே இப்போது இருந்து வரும் உறவுதான் இதற்குக் காரணம். இலங்கை அரசாங்க இலாகாக்களில் இந்தியர் நியமனத்துக்கு இலங்கை மந்திரிமார்கள் கொண்டு வந்த கட்டுப்பாடு நீக்கப்படும் வரை இந்திய அரசாங்கத்தின் தடையுத்தரவும் நீடிக்கலாம்.

நூறு வருடங்களாக [illegible] வரும் தொழிலாளர்களை இலங்கை மந்திரிகளின் தனிப்பொருளாகப் [illegible] பெரிய அநியாயம். இலங்கையிலுள்ள இந்தியர்கள் அனைவரையும் விரட்டுவதுதான் இலங்கை மந்திரிகளின் கொள்கை யென்று தோன்றுகின்றது"

விளம்பரம்

[illegible] 1940-ம் ஆண்டு ஜூன் 17-ந் உ [illegible] 12 [illegible]

[illegible] 15உ [illegible]

யாழ்ப்பாணப்பகுதி

(1) [illegible]
(2) [illegible] " "
(3) [illegible] " "
(4) [illegible] " "
(5) [illegible] " "
(6) [illegible] " "

14 4-7-40.

தம்பு ஸ்ரோரிற் பயங்கரத் தீ விபத்து

7 கொட்டில்கள் எரிந்து சாம்பராயின

கொழும்பு ஜூலை 2உ

நேற்றுப் பிற்பகல் மருதானை டீன்ஸ்றோட்டிலுள்ள மெஸர்ஸ் ஹெய்லி அன்ஹென்னி கம்பெனியைச் சேர்ந்த தம்பு ஸ்றோரில் ஒரு பிரமாண்டமான தீ விபத்து ஏற்பட்டது. அதன் விளைவாகத் தம்பு அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஏழு கொட்டில்கள் அநேகமாகச் சாம்பராகி விட்டன.

மகாபோதிக் கல்லூரிக்குச் சமீபத்திலுள்ள பேஸ்டர் ஞாபகார்த்த ஆஸ்பத்திரியை அடுத்துள்ள ஒரு குடிசையிலிருந்து நெருப்புப் பற்றியதாக நம்பப்படுகிறது. ஆஸ்பத்திரிக் கட்டிடத்தின் கூரையிலுள்ள கைமரமொன்றில் நெருப்புப் பற்றியதும் அங்கிருந்த நோயாளிகளான பௌத்த குருமார்கள் பாதுகாப்பை முன்னிட்டு அப்புறப்படுத்தப் பட்டனர். ஆயின், அங்கு பற்றிய நெருப்பு விரைவில் அணைக்கப் பட்டுவிட்டது.

விபத்து அறிவிக்கப்பட்டதும் நெருப்பணைக்கும் படையினர் திரு. பி. ஈ. விசிங்காவின் தலைமையில் 4 தீயணைக்கும் யந்திரங்களோடு ஸ்தலத்திற்கு விரைந்து வந்தனர். இதற்கிடையிற் காற்றினால் நெருப்புப் பரவித் தம்புச் சாலைகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்தன.

குறித்த தம்பு ஸ்றோரைச் சேர்ந்த தொழிலாளிகள் கைவாளிகளில் தண்ணீர் எடுத்து வந்து நெருப்பை அணைக்க முயற்சித்தனர். ஆயின், அவர்கள் முயற்சி பயன்படவில்லை. சில நிமிஷ நேரத்திற்குள் நெருப்பு பற்றிய தம்புக் கொட்டில்களுக்குச் சமீபத்தில் ஆட்கள் போகமுடியாமலாகிவிட்டது.

தீயணைக்கும் படையினரும் மருதானையிலிருந்து வந்த பொலிசாரும் தீயணைக்கும் வேலையைச் சிரமமின்றிக் கவனிப்பதற்காக டீன்ஸ்றோட்டில் வாகனப் போக்கு வரத்து நிறுத்தி வைக்கப்பட்டது. தீயணைக்கும் படையினர் ஸ்தலம் வந்து சேர்ந்ததும் சுற்றியுள்ள கட்டிடங்களில் நெருப்புத் தாவாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டனர்.

ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸ் கைதியாயினர்

பாதுகாப்புச் சட்டப் பூதத்தின் கோபப்பாய்ச்சல்

கல்கத்தா, ஜூலை, 2

அகில இந்திய தேசியக் காங்கிரஸின் ராஷ்டிரபதியாக இருமுறை பதவி வகித்தவரும் அகில இந்திய முன்னேற்றக் கட்சித் தலைவரும் அக்கட்சியின் ஸ்தாபகருமாகிய ஸ்ரீஜத். சுபாஷ் சந்திர போஸ், கல்கத்தாவில் எல்ஜின் றோட்டிலுள்ள அவருடைய வாசஸ்தலத்தில் இந்திய பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி இன்றுபகல் கைது செய்யப்பட்டார்.

ஆங்கில பிரவேச வைத்திய பரீக்ஷை

சித்தியெய்தியோரின் பெயர்கள்

1940-ம் ஆண்டு ஜூன்மீ நடைபெற்ற ஆங்கில பிரவேச வைத்தியப் பரீக்ஷையிற் சித்திபெய்திய தமிழர்களின் பெயர்கள் வருமாறு:-

இரண்டாம் பிரிவு:- A. G. முத்துத்தம்பி, S. ஜயக்கொடி

சாதாரணசித்தி:- K. குமாரசாலன், V. இராசலிங்கம், செல்வி M. சின்னப்பு

பின்வருவோர் வைத்திய பரீக்ஷையைப் பூரணமாக்கினர்:-

G. T. ஐயாத்துரை, J. T. சுப்பிரமணியம், M. துரைசிங்கம்.

பின்வருவோர் குறித்த பாடங்களிற் சித்தியெய்தினர்:- செல்வி S. சின்னத்தம்பி (கெமிஸ்ட்ரி) K. சிவசங்கரம் (பிஸிக்ஸ்) P. G. சோமசுந்தரம் (பிஸிக்ஸ்) மிஸ் K. வேதநாயகம் (பிஸிக்ஸ்) S. வேலும்மயிலும் (பயோலஜியும் பிஸிக்சும்)

இராசப்பிரதிநிதியின் முதல் அவசரச்சட்டம்

யுத்ததளவாட உற்பத்தி
இந்தியாவில் அபிவிருத்தி முயற்சி

கட்டாய சேவைக்கு ஏற்பாடு
கனம் முதலியாரின் விளக்கம்

ஸிம்லா, ஜூன் 28

யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளில் திறமையுடைய இந்தியத் தொழிலாளரைக் கட்டாயப்படுத்திச் சேர்க்க இன்று இராஜப்பிரதிநிதி ஒரு அவசரச்சட்டம் இயற்றியிருக்கிறார். இன்னும் சில மாதங்களில் தொழிற்சாலைகளில் ஏறக்குறைய 4000 பேர் சேர்க்கப்படவேண்டும். வேறு வேலையில் இந்தத் தொழிலாளர்களிருந்தால் இவர்களின் முதலாளிகளைக் கட்டாயப்படுத்தி யுத்த தளவாடத் தொழிற்சாலைகளுக்கு இவர்களை அனுப்பும்படி செய்ய இந்த அவசரச் சட்டம் இடம் கொடுக்கிறது. அவசர நிலை தீர்ந்தபிறகு இந்தத் தொழிலாளரை மீளவும் பழைய வேலைகளில் அமர்த்தவும் ஏற்பாடு செய்யப்படும். இவர்களை புதிய வேலைக்கு எடுத்துக்கொள்வதால் மற்றவர்களைப் பயிற்சி செய்யத்தக்க நடவடிக்கைகள் ஒருமாதத்துக்குள் எடுத்துக்கொள்வதற்கான யோசனை கூற ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க அறிக்கை

இந்த அவசரச்சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையின் விபரமாவது:—

ஐரோப்பாவில் நிலைமை நெருக்கடியாகிவருவதால், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் யுத்த முயற்சிகளைத் துரிதப்படுத்தவேண்டியிருக்கிறது. இந்தியாவும் இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னும் அதிகமாகப் பிரிட்டனுக்கும் நேசதேசங்களுக்கும் உதவவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. யுத்த நடவடிக்கைகளில் இந்தியா தீவிரமாகக் கலந்துகொள்ளவும் வேண்டியிருக்கிறது.

ஜூன்மாதம் 19ந் தேதி இராஜப்பிரதிநிதி ரேடியோமூலம் செய்த ஒரு பிரசங்கத்தில எதிர்ப்பினின்றும் இந்தியாவைக் காக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுவதாகக் கூறினர். அதற்கேற்ப இப்போது இந்தியாவிலுள்ள வசதிகளை கொண்டே அதைக் காத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்வதோடு சமீபக் கிழக்குத்திசைப் பிரதேசத்துக்கும் மத்தியக் கிழக்குத்திசைப் பிரதேசத்துக்கும் வேண்டிய தளவாடங்களையும் கூடுமானவரை வசதி செய்ய முயற்சி நடக்கிறது. இதற்காக இந்திய யுத்த தளவாட உற்பத்திச் சாலைகள் விருத்தி செய்யப்படும். இப்போதுள்ள தொழிலாளர்களுடன் திறமையானதொழிலாளர் இன்னும் 4000 பேருக்குமேல் வேண்டியிருக்கிறது. இதுவரை நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே இத்தொழிற்சாலையிற் சேர்ந்துவந்தார்கள். இனி இத்தொழிலிற் கட்டாயப்படுத்தியும் சிலரைச் சேர்க்க வேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. அதனுல் இந்த அவசரச் சட்டம் இப்போது பிறப்பிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகள் விஷயமாகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. வேறு சட்ட மூலம் பிரிட்டிஷ் ஐரோப்பியப் பிரஜைகள் கட்டாய தேசப் பாதுகாப்புச் சேவையிற் சேர்க்க ஏற்பாடு செய்யப்படும்.

தொழிலாளருக்கு வசதி

இந்த அவசரச் சட்ட நிபந்தனைகளை அனுஷ்டானத்துக் கொண்டுவரத் தனியாகத் தேசபாதுகாப்புச் சேவைத் தொழிலாளர் போர்டு ஆங்காங்கு ஏற்பட்டு இந்திய அரசாங்க தொழில் இலாகாவின் மேற்பார்வையில் வேலை செய்துவரும். இந்த போர்டுகளின் அபிப்பிராயத்தை அங்கீகரிக்காதவர்கள் மத்திய அரசாங்கத்துக்கு மனுச்செய்து கொள்ளலாம். சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் ஆக்ஷேபம் தெரிவித்தால், அதை இந்த போர்டு விசாரிக்கவேண்டும். வேறு தொழிற் சாலைகளில் உள்ள திறமையுடையவர்களை இந்தத் தொழிற்சாலைக்குத் தருவிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்தத் தொழிலாளர்களுக்குள்ள பிராவிடண்டு நிதி வசதி முதலியவற்றிற்கு எவ்வித பாதகமும் நேராமற் பாதுகாப்பு அளிக்கப்படும். அவசர நிலைமை தீர்ந்ததும் மீண்டும் பழைய வேலைக்குப் போய்ச் சேரவழியும் தேடப்படும்.

அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு இந்தப் போர்டின் அநுமதியின்றி எந்தத் தொழிலாளரும் இத்தஏற்பாட்டிற் கலந்துகொள்ளத் தாங்கள் வேலைசெய்துவரும் தொழிற்சாலையிலிருந்து விலகக்கூடாது.

கிரேட் பிரிட்டனிலும் மற்றக் குடியேற்றநாடுகளிலும் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களைப்போல அவ்வளவு தீவிரமாக இந்த இல்லையானுலும், இந்தியாவிலிருந்தே யுத்தத்துக்கான உதவியைச் செய்ய இதனுல் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

பயிற்சிக்கு ஏற்பாடு

அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்கொண்டு தொழிலாளர்களை யுத்த தளவாட உற்பத்திப் பயிற்சியில் [illegible]படுத்தும் விஷயத்தையும் கவனிக்காமலில்லை. தொழில் முறையைக் கற்பிக்கும் ஸ்தாபனங்கள் பல இப்போது திறமையான தொழிலாளர்களை உதவக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, உடனே யுத்த தளவாட உற்பத்திச்சாலைகளில் அவர்களைச் சேர்க்க முடியவில்லை. ஆகவே, இதைப்பற்றிப் பரிசீலனைசெய்து யுத்த காலத்தில் உதவும் முறையில் இத்தொழிலாளர்களைப் பயிற்சிசெய்விக்கும் வழி யெனவெனக் கண்டுபிடிக்கவும் பயிற்சி கூடங்களை மாணவர்கள் விட்டதும் நாட்டிற்குப் பிரதானமாக வேண்டிய தொழிலில் இடுபட அவர்களுக்குத் தக்க போதனை அளிப்பதெவ்விதம் என்பதுபற்றியும் யோசித்து முடிவுகூற ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

இக்கமிட்டியார் இப்போது நடைபெற்றுவரும் பயிற்சிக் கூடங்களில் எந்த எவ்வித உதவி செய்யவேண்டுமென்பதையும் நிர்ணயிப்பார்கள். பொதுவாகத் தொழிற்கல்வியைப்பற்றி இக்கமிட்டி யாதொரு பரிசீலனையும் செய்யாது.

கமிட்டியின் அமைப்பு

இக்கமிட்டியில் பின்கண்டவர்களிருப்பார்கள்:-

இந்திய அரசாங்க கல்விக் கமிஷனர் (தலைவர்) சிவில் விமானப் போக்குவரத்து இலாகத் தலைவர், இராணுவ இலாகாப் பிரதிநிதி, றெயில்வே போர்டுப் பிரதிநிதி, அட்ஜூடண்ட் ஜெனறலின் பிரதிநிதி, இராணுவவிமான இலாகாப் பிரதிநிதி, இந்திய அரசாங்க தொழில் இலாகா உதவிக்காரியதரிசி இக்கமிட்டியின் காரியதரிசியாக விருப்பார்.

கனம் முதலியார் விளக்கம்

இந்த அவசரச்சட்டம் மிகப் பிரதானமானதென்பதை விளக்கி இன்று இந்திய அரசாங்க வியாபாரத் தலைவர் கனம் இராமசாமி முதலியார் ரேடியோவில் ஒரு பிரசங்கஞ் செய்தார். அதன் சாராம்சவது:-

சாம்ராஜ்யத்துக்கு நேர்ந்துள்ள நெருக்கடியைப்பற்றி வைஸ்ராய் 19ந் திகதி இந்திய மஹாஜனங்களுக்கு ஒரு பிரசங்கஞ் செய்தபோது நாம இன்னும் அதிகமாகப் பிரிட்டனுக்கு உதவ வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். அதையொட்டி மத்திய அரசாங்கத்தார் பிறப்பிக்கவிருக்கும்பிரதானமானவொரு சட்டத்தைப்பற்றி இன்று உங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மத்யதரைக் கடற் பிரதேச நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் கவனிக்கும்போது இந்தியா, யுத்த தளவாடங்கள் சம்பந்தமாக அதிகமாகப் பிறர் உதவியை நாடாமலிருப்பதே நன்மையெனத் தெரிகிறது.

அது மட்டுமல்ல, எகிப்து மத்திய கிழக்குத்திசைப் பிரதேசம் முதலிய விடங்களுக்கும் இது தன்னுலான உதவியைச் செய்யவேண்டியிருக்கிறது. அதோடு இந்நாட்டில் ஆயுதப்படைகளை அதிகரிக்க வேண்டுமென்றும் பிரதானமாக விமானப்படைகளை விருத்தி செய்யவேண்டுமென்றும், ஒரு கோரிக்கை இருந்துவருகிறது. நவீன முறையில் ஒரு இராணுவத்தை அமைப்பதானுல் அதற்கேற்ற சாதனங்கள் வேண்டும். ஆகாயப் படையில் திறமையான இஞ்சினீயர்கள் முதலியவர்களும் உயர்ந்த முறையிற் பயிற்சிபெற்ற தொழிலாளரும் இருக்க வேண்டும். ஆகவே, இந்தியாவிலுள்ள யுத்ததளவாடத் தொழிற்சாலைகளை விருத்தி செய்து அதில் திறமையான தொழிலாளர்களைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டியது அவசியம். யுத்த தளவாடங்கள் என்ருல், கொலைக்கருவிகளை மட்டும் குறிப்பிடவில்லை. நவீன முறையில் அமைக்கப்படவேண்டிய ஒரு இராணுவத்துக்கு வேண்டிய எல்லாத் தளவாடங்களையும் குறித்துச் சொல்லுகிறேன். இந்தத் தளவாடங்கள்யாவும் ஏராளமாகவேண்டியிருக்கிறது. சாதாரண முறையில், இந்த ஒன்பது மாதங்களாக சம்மட விருத்த தளவாடங்கள் போதுமானவையாகவிருந்தன அனுல், இப்போது யுத்தநெருக்கடி அதிகமாகி வருவதால் இராணுவபலத்தைப் பெருக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. ஆகவே கூடுமானவரை கட்டாயப்படுத்தியும் தேசபாதுகாப்பு சேவையிற் சிலரை இடுபடுத்தவேண்டியதிருப்பதும் சேர்ந்திருக்கிறது.

இரண்டு விஷயங்கள்

முதலில் நான் இரண்டு விஷயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இராணுவத்திற் சேருவதற்கு இப்போது கட்டாயம் ஒன்றும் செய்யப்படவில்லை எனெனில், அந்த விஷயத்திற் கட்டாயமின்றியே சமத்து வேண்டிய எல்லா உதவிகளும் கிடைக்கின்றன; இவ்வித சட்டம் பிறப்பிப்பதாற் கட்டாயப்படுத்தாமல் ஒருவரும் அரசாங்க உதவிக்கு வரமாட்டார்களென்று கருதிவிடவுங்கூடாது. இப்போதுகூடக் கட்டாயமில்லாமலே பல தொழிலாளரைச் சேர்த்துவிடலாம். ஆனுல், கட்டாயமில்லாமல் திறமையுடன் கூடிய இத் தொழிலாளர்களை யுத்தத் தளவாடத் தொழிற்சாலைகளில் இப்போது சேர்த்துவிட்டாற் பிறகு சமாதானம் ஏற்பட்ட காலத்தில் இவர்களுக்குப் பழையபடி வேலை கிடைக்க ஏற்பாடு செய்வது சற்றுக் கஷ்டமாகவிருக்கும். அந்தக் கஷ்டத்தை நீக்கித் தொழிலாளருக்கு ஒரு உரிமையிருக்கும்படி செய்யவே கட்டாய அவசரச்சட்டத்தைப் பிறப்பிக்க உத்தேசித்திருக்கிறோம்.

பிரிட்டிஷ் ஐரோப்பிய பிரஜைகளுக்கு ஏற்படுத்தாத ஒரு நிர்ப்பந்தத்தை நாங்கள் இந்தியருக்குமட்டும் ஏற்படுத்துவதாக நினைக்கவேண்டாம். இந்தியருக்கும் சரி ஐரோப்பியருக்கும் சரி கட்டாய சேவை எதாவது ஒரு முறையில் நடைக்கு வருமென்பதை முன்னமே தெளிவுபடுத்தியிருக்கிறோம். தற்சமயம் நான் இந்தியரைப்பற்றி மட்டுமே பிரஸ்தாபிக்கிறேன். இந்தியருக்குக் கட்டாய சேவிஸ் என்பது ஒரு புதிய விஷயம். முன் யுத்தத்தில் இந்தமுறை அனுஷ்டிக்கப்படவில்லை. ஆனுல், யுத்த நெருக்கடி இப்போது அதிகமாகியிருக்கிறது. என் நாட்டினரும் யுத்த விஷயத்தில் அதிகமாக ஈடுபட ஆவல்கொண்டிருப்பதை அரசாங்கத்தாரும் உணர்ந்தார்கள். அதனுல இப்போது சற்று விதமாகவே ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தக் கட்டாய சேவை முறையை அவர்கள் குறைகூருமல் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன். உண்மையில இதைப் பெருமையாகக் கொள்வார்கள் எனவும் எணுகிறேன்.

பிற்காலப் பாதுகாப்பு

நாளை பிறப்பிக்கப்படவிருக்கும் அவசரச் சட்டப்படி அரசாங்கத்தார் திறமையுடைய தொழிலாளர்களை யுத்த தளவாட உற்பத்தியிற் கட்டாயப்படுத்திச் சேர்ப்பார்கள். இந்தத் தொழிலாளர்கள் வேறு எங்கேயாவது வேலையிலிருந்தால் அவர்களின் முதலாளிகளைக் கட்டாயப்படுத்தி அவர்களை அனுப்பும்படிச் செய்வார்கள். மத்திய அரசாங்கத் தொழில் இலாகா இவ்விஷயங்களைக் கவனிக்கும் இந்த அவசரச் சட்டத்தை நீங்கள் நன்ருகப் படித்துப்பார்த்தால் இது எவ்வளவு ஜாக்கிரதையுடனும் தொழிலாளர் உரிமைகளுக்குப் பாதகம் நேராமலும் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதை உணருவீர்கள். ஆள்சேர்க்கும் சபையில் தொழில் இலாகாப் பிரதிநிதிதான் தலைவராக விருப்பார். இந்தச் சபையின் முடிவை மாற்ற மத்ய அரசாங்கத்துக்கு அப்பீல் செய்துகொள்ளவும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களைப் புதிய வேலைக்கு எடுத்துக்கொள்வதால், அவர்களின் பொருளாதார வசதி பாதகமடையாமலிருக்கவும் வழி தேடப்படும். அவசர நிலைமை தீர்ந்ததும் இந்தத் தொழிலாளர்களை மீண்டும் பழைய முதலாளி வேலைக்கு அமர்த்திச்சொள்ளவேண்டும் மேற்கொண்டு திறமையுடைய தொழிலாளர்கள் பெருகுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. இவர்களுக்கான பயிற்சி அளிப்பதற்குத் திட்டம் தயாரிக்க ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யுத்த தளவாட உற்பத்திச் சாலைகளை விருத்தி செய்துவிட்டால அவற்றில் திறமையுடைய தொழிலாளர்கள் போதியபடி இருக்கவேண்டியது அவசியம்.

ஓர் எச்சரிக்கை

கடைசியாக எச்சரிக்கையாக நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கைத்தொழில் தெரிந்த ஒவ்வொருவரும் இதன்படி கட்டாயப்படுத்தப்படுவார்கள் என நினைக்கவேண்டாம். ஒரு குறிப்பிட்ட அளவுதான் இந்தக் கட்டாய சேவை முறையை நடைக்குக்கொண்டுவர உத்தேசித்திருக்கிறோம் என்பதை முதலிலேயே சொல்லியிருக்கிறேன். முதலில் இன்னும்சில மாதங்களில் இந்தியா முழுவதிலுமிருந்து ஏறக்குறைய 4000 பேர்தான் சேர்க்கப்படுவார்கள். இவர்கள் திறமையுடைய வர்களாக விருக்கவேண்டுமாகையால் இத்தொகையை அதிகப்படுத்துவதற்கு இடமில்லை. இந்த ஏற்பாட்டால்பிற்காலத்திலும் இந்தியாவுக்கு லாபமுண்டு. யுத்த முயற்சியிற் பிரிட்டனுக்கு உதவுகிறோம் என்ற ஒரு திருப்தி இருப்பதோடு சமாதான காலத்திலும் இது இந்தியாவுக்கு நன்மை பயப்பதாகவிருப்பதால் இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென நான் என்நாட்டினருக்குச் சிபார்சு செய்கிறேன்.

திருக்கல்யாண உற்சவம்

இணுவில் கந்தசாமி கோவில் நாளை இரவு (5.7.40) ஆறுமுகசுவாமி திருக்கல்யாண உற்சவம், திரு. காசிலிங்கநாயர் இராமநாதரின் உபயமாக அவருடைய பேரப் பிள்ளைகளாற் செவ்வனே நடத்தப்படுமென அறிவிக்கிறோம்.

உலகம்பலவிதக் கதை

(முன்தொடர்)

அன்பான வாழ்க்கை

"கொண்டான் குதிப்பதிலான் பெண்டாட்டி" யென்ற பிரகாரம் சொர்ணம் தன் நாயகனுடைய குதிப்பதிற்கு அதற்கேற்ப நடந்தமையினுல் நாயகன் அவள்மீது அதிகம் ஆர்வம் பாராட்டி நடப்பானாயினன்; நீதிவான் தாம் எதிர்பார்த்திருந்த குணங்கள் செயலிற் காட்டினுர், மேலான குணங்களும் நடைகளும் சொர்ணத்தில் இருக்கின்றனவென்பதை, அவளைத் தமக்கு வாழ்க்கைத் துணையாகவேபெற்றதில் கண்டார். இல்வாழ்க்கைக்குரிய கருமங்களைச் சொர்ணம்பிகை தானே நிர்வகித்து நடத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாது தனது கணவனுடைய உத்தியோகக் கடமைகளிலும் அவனுக்குத் துணை புரியுந் திறமை வாய்ந்தவளாகக் காணப்பட்டாள். சொர்ணம் பெரும்பான்மையும் தன்னுடைய நாயகனது உத்தியோகத்தானத்திலுள்ள வீட்டிலேயே வாழவேண்டியவளானுள். நீதிவானும் இராசசேகரனும் உற்ற நண்பராயினர்; நீதிவானுடைய தூண்டுதலின்படி இராசசேகரன் நியாயவாதக் கல்விக்குரிய பரீட்சையிற் சித்தியடைய வேண்டி அதற்காகிய கல்லூரியில், கிளாக்கர் வீட்டில் வசித்துக் கொண்டு படித்து வருவானாயினுன். கிளாக்கரும் மனைவியும் சொர்ணம்பிகை எக்காலத்திலும் தங்களுடன வசித்தல் இயலாதெனக் கண்டு, தங்கள் அங்கீகார புத்திரியாகிய ஞானம்பிகையையே தங்களுடன் வைத்துக் கொண்டனர்; சொர்ணம்பிகை தன் கணவனுடன் தனித்தும் இடையிடையே பிதா மாதாக்கள் வீட்டிற்கு வந்து போவாளாயினுள். இராசசேகரனும் ஞானம்பிகையும் இடையிடையே தங்கள் ஊரிற்குச் சென்று சில நாட்கள் அங்கு வசித்து மீண்டு வருவதுமுண்டு; சொர்ணம்பிகை மூலமாக இராசசேகரன் ஞானம்பிகையென்னுமிவர்களுடைய வரலாறறைடறிந்த நீதிவான் அவ்விருவரிடத்தும் எவ்வகையான பேதமும் பாராட்டுதலின்றிப் பெருந் ஆர்வம் பாராட்டி நடப்பாராயினர். சுருக்கச் சொல்லுமிடத்து அவர்களெல்லோரும் ஓரே குடும்பத்தினர்போல பரஸ்பர உரிமை பாராட்டி வாழ்வாராயினர்; ஞானம்பிகை தன் தாய் வயோதிகம் காரணமாகத் தளர்ச்சியடைவதைக் கண்டு தாயைக் கூட்டிக்கொண்டு வந்து பட்டினத்திலுள்ள தனது இல்லத்திலேயே வைத்து ஆக வேண்டிய கடமைகளை அன்புடன் செய்து வருவாளாயினுள். ஊரில் அவர்களுக்குரிய நிலம்புலங்களையும் பொருள் பண்டங்களையும் ஞானத்தின் மாமனுராகிய முதலியாரே பார்த்து வந்தார். காலகதியில் இந்த இரு தம்பதிகளும் புத்திரப்பேறு முதலாஞ் சகல சம்பத்துக்களையுமடைந்து இனிது வாழ்ந்தனரென்பது நாம் சொல்லாமலே அமையும்.

கதையின் பயன்

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்—மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது வள்ளுவர் வாக்காகும். இக்கதையின் நாயகிகளாய் விளங்குவோர் ஞானம்பிகை சொர்ணம்பிகையென் னுமிருவருமாவர். இவர்களுள் எத்தப்பெண் சிறந்தவளென்பதை இக்கதையை எழுதிய எனக்குஞ் சொல்ல முடியவில்லை. ஞானம்பிகை சைவத் தமிழ் மக்களுக்குரிய குடும்பத்தில் பழைய முறையில் வளர்க்கப்பட்டு வந்தவள்; சமயபக்தி அநுட்டானம் தமிழ்க் கல்வியறிவு தொன்மை பாராட்டுதல் முதலிய குணங்களோடு கூடியவராகிய அருளம்பல உபாத்தியாயராகிய ஞானத்தின் பிதா தமது வகுப்பிற்குத் தமிழ்க் கல்வியையும் சமய அநுஷ்டானுணர்ச்சியையும் பிற்காலத்திற்கேற்ற இல்வாழ்க்கைக்குரிய ஒழுக்கங்களையும் புகட்டி அன்புடன் வளர்த்து வந்ததின் பயனுகவே, அவள் நியதி பூண்டவளாய் வளர்வாளாயினுள்; தனக்கு வரனுக நிச்சயிக்கப்பட்டிருந்த தன் மைத்துனனுகிய இராசசேகரன் விபரீத விளக்கத்தினுல் தன்னை ஒரு சமயத்தில் வெறுத்த விடத்தும், ஞானம் அதனுற் கவலைப்பட்டாளே யொழியத் தன் வரனை வெறுத்தவளல்லள். தான் மங்கைப் பருவமடைந்த பின், இராசசேகரனை தனக்கு வரனென நிச்சயிக்கப்பட்டுள்ளவனென்பதை அறிந்திருந்தும் அவனுடைய கண்களிற் புலப்படாது ஒதுங்கி யொழுகிய ஞானம்பிகை, பின்பு அவன் தன் இல்லத்திற்கு வந்த காலங்களில் அவனுடன் வார்த்தையாடி அவனை உபசரித்து அவனுக்கு உணவு பரிமாறினுளென்று சொல்லப்பட்டிருக்கிறதே இது முறையாகுமா எனில், ஆகும். ஏன்? தன்னைப் பெற்ற பிதா அந்திய காலத்திலே தமது மனைவி சுற்றத்தார் மனைவி பலர் சமுகத்தில், "தம்பி, இவள் உன் அடைக்கலம்" என்று சொல்லித் தம் மகளுடைய கையைப் பற்றி இராசசேகரனுடைய கையிற் கொடுத்து உயிர் துறந்தார். அதன் பின்பே ஞானம், அப்பொழுதும் தன் தாய்சொற்படி இராசசேகரனை உபசரித்து அவனுடன் வார்த்தையாடி அவனுக்கு உணவிட்டாள். அப்படியான சமயத்திலும் அவளிடத்துள்ள மடம் நாணம் அச்சம் பயிர்ப் பென்னும் நாற்குணங்களும் உடன் விளங்கின. இராசசேகரன் பிரிவாற்ருது ஞானம் கண்ணீர்சிந்த, "கண்ணே, அழவேண்டாம்" என்று அவன் அன்பு மேலீட்டினுல் தன் நிலையை மறந்து, அவள் கண்களிற் ததும்பும் நீரைத் துடைக்க முயல, ஞானம் ஒரு புறத்தே ஒதுங்கித் தன் முன்ருனையாற் ருனே தன் கண்ணீரைத் துடைத்தாளென்றதனுல், முறையே விவாகம் ஆகும் வரையில் அவளிடத்துள்ள நாண் காய் குணமாகிய பயிர்ப்பு அவளை விட்டகலவில்லை யென்பது புலப்படுகின்றதல்லவா? இனி ஞானம் அன்பின் தோற்றமானவளென்பதும் பணிவு பயபக்தி பொறுக்கமிவைகளே தன் இயல்பாகவுள்ளவளென்பதும் இரு ஏதுக்களால் எடுத்துக் காட்டத்தகன. பட்டினத்திலிருந்து ஊருக்கு மீண்டு வரும்போது சொர்ணத்தின் காதலில் இடுபட்டு ஞானத்தை அறவே மறந்து ஊருக்கு மீண்டு வரும் இராசசேகரன் ஞானம்பிகையின் வீட்டிற்குத் தன் பெறுமூர் ஆண்டுதலாற் செல்லும்போது, அவளைக் கண்ட மாத்திரத்தே சொர்ணத்தையும் மறந்து தன்னையும் மறந்து ஞானத்தின் காதலிலே இடுபடுவான். இது மாத்திரமல்லாமல், இராசசேகரனே தன் காதலனென்ற நிச்சயத்துடன் இருந்த சொர்ணம்பிகை ஞானத்தின் இல்லத்தைக்காந்திராப் பிரகாசம் அடைந்து அவளைக்கண்டு வார்த்தையாடிச் சகோதரத்துவம்பாராட்டிய பின், தன் காதலனுக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிகையே அந்த ஞானம்பிகை யென்பதை அறிந்த மாத்திரத்தில், அவள்மேற் கொண்ட பரிவு காரணமாகத் தான் இராசசேகரனை மணப்பதில்லை யென்று நிச்சயித்து அப்படி மணக்க நினைத்ததும் தன்மேல் துரோகமென அஞ்சிப் பச்சாத்தாபப்படுகின்ருள். சொர்ணம்பிகை இப்படிச் செய்தமைக்குக் காரணம் ஞானத்திடம் இயல்பாகக் குடிகொண்டுள்ள அன்பின் தோற்றமும் ஆதரவான வார்த்தையும் பரிவான நடையுமல்லவா!

ஞானம் சொர்ணத்திலே பாராட்டிய அன்பு தலையாய அன்பெனலாம். அவள் விதியின்படி எதுவும் நடக்கும் என்ற மேலான கொள்கை பூண்டவள்; தூய சிந்தையும் நியதியும் உடையவள். இன்னும் பல அரிய குணங்கள் ஞானத்திடம் உண்டென்பதைக் கதையை அவதானித்துப் படிப் போர்க்கு ஆங்காங்கு விளங்கும். (வரும்)

கதிர்காமத் திருவிழா

கிரயங்குறைந்த பிரயாணச் சீட்டு

கதிர்காமத் தலத்தின் ஆடித் திருவிழாக் காலத்தில் புகையிரத மார்க்கமாக மேற்படி தலத்திற்கு யாத்திரை செய்வோரின் வசதியை உத்தேசித்து, இலங்கை புகையிரதப் பகுதியார் மூன்று வகுப்புப் பிரயாணிகளுக்கும் பின்வருமாறு மலிந்த பிரயாணச் சீட்டுக்கள் உதவலாயினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாத்துறைக்கு;

1-ம் வகுப்பு	ரூபா	29—20
2-ம் வகுப்பு	,,	19—25
3-ம் வகுப்பு	,,	9—30

மலிவு சீட்டுக்கள் இந்த யூலாய் 3-ந் திகதி தொடக்கம் 17-ந் திகதி முடிய உதவப்படும். சீட்டுக்கள் யூலாய் 22-ந் திகதி முடிய உபயோகிக்கலாம்.

குறித்த தேதியில் ஆடிவேலுற்சவத்திற்கும் யாழ்ப்பாணம் முதலிய தானங்களிலிருந்து கொழும்புக்குப் போய் வருதற்கு ஒன்றேகால் விகிதமான பிரயாணச் சீட்டுக்கள் பெற்றுக் கொள்ளலாம்.

"உலகம் அழியாமல் தடுக்க உண்மை அஹிம்சையினுல் தான் முடியும்"

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. பலம் படைத்தவர்களும் அஹிம்சா முறையை அநுஷ்டித்து வெற்றி பெறலாம் என்பதை உலகுக்கு விளக்க எனக்கு இறைவன் ஒரு வழி காட்டினுல் இந்தப் பிரிவினையும் தற்காலிகமாகவிருந்து மறைந்து விடும்; வழி காட்டாவிட்டால் அவர் என்னைப் பிரித்து விட்டது சரியென்று ஏற்படும்.

எனது சக்தியற்ற நிலை அவ்விதம் வெளிப்பட வேண்டுமென்பது இறைவன் திருவுள்ளமானுல் மேற்கொண்டு அஹிம்சா வழியில் உலகை நடத்த எனக்குப் போதிய ஆற்றல் இல்லையென்பதைப் பணிவுடன் ஒப்புக் கொள்ள வேண்டியதே.

காரியக் கமிட்டியின் நிலை

காரியக் கமிட்டியினர் காங்கிரஸ்காரர்களிற் பெரும்பாலான பிரதிநிதிகள் என்ற அபிப்பிராயத்துடன் தான் இவ்வளவும் பேசுகிறேம். காங்கிரஸ் காரர்கள பலரும் அஹிம்சாவழி நின்று ஒழுகினுல அவர்களுக்கு அதிக ஆனந்தம் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனுல், பெரும்பாலோர் அவ்விதமில்லை. சிலர் மட்டுமே அந்த முறையைச் சரிவர அனுஷ்டிக்க வல்லவர்கள். பிரதிதினமும் அஹிம்சையை வெளிப்படுத்த ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம ஏற்படுகிறது. வகுப்புக கலகமும் கொள்ளையும் சச்சரவும் ஏற்படுகின்றன. இந்தச் சந்தர்ப்பங்களில அஹிம்சா வழி நிற்பவர்கள் இதை அநுசரிக்கலாம். போதுமானபடி அதை அநுசரித்தாற் சுற்றியிருப்பவர்களையும் அது அந்த வழியில் இழுக்கத் தவறாது.

அஹிம்ஸா வெல்லும்

வெறும பிடிவாதத்திற்காக அஹிம்சையின் சக்தியில் நம்பிக்கையில்லை என்று ஒரு காங்கிரஸ் காரரும் கூறவில்லையென்பது எனக்கு நன்ருகத் தெரியும். உள்நாட்டுக் குழப்பங்களையோ அல்லது வெளிநாட்டவரின் தாக்குதல்களையோ சமாளிப்பதில் அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றவேண்டுமென்று வற்புறுத்தும் காங்கிரஸ் காரர்கள் அந்தத் தர்மத்தைத் தங்களுடைய தினசரி வாழ்க்கையிற் பின்பற்றி நடக்க வேண்டும். பலிஷ்டர்களின் அஹிம்சை வெறும் கொள்கையாக இருக்க முடியாது. அது ஒரு லட்சியமாக இருக்க வேண்டும். அல்லது 'லட்சியம்' என்ற வார்த்தைக்கு ஆட்சேபமிருந்தால் 'வெறி' என்று வைத்துக்கொள்ளலாம். வெறி பிடித்தவரின் அனுட வாழ்க்கையில் அது விகசிதமாகும். ஆகவே, யார் யார் அஹிம்சா வெறிகொண்டிருக்கின்ருர்களோ அவர்களுடைய குடும்ப வாழ்க்கையில் அந்தரங்கத் தர்மம் மிளிர்வதைக் காணலாம். தம்முடைய அகம் பக்கத்திலுள்ளவர்களுடன் பழகுவதிலும் தம்முடைய அலுவலகளிலும், காங்கிரஸ் கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களிலும், விரோதிகளுடன் நடந்து கொள்வதிலும அவர் அஹிம்சையையே கடைப்பிடிப்பார்.

உண்மையான அஹிம்சை

இப்பொழுது காங்கிரஸ் காரர்களிடையே இத்தகைய உணர்ச்சி பரவாதிருப்பதாலுன் உள்நாட்டுக் குழப்பத்தையோ அன்றி வெளிநாட்டவரின் தாக்குதலையோ அஹிம்சையைக் கொண்டு சமாளிக்கக் காங்கிரஸ் காரர்கள் தயாராகவில்லை என்று காரியக் கமிட்டி அங்கத்தவர்கள் மிகவும் சரியாக முடிவு செய்தார்கள். அஹிம்சா தர்மத்தின் மூலம் ஏற்படும் திலகப் அதிகாரிகளைப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு இணங்குமாறு செய்துவிடும். ஆனுல் குழப்பங்களில் அத்தகைய காரியத்துக்கு இடமேயில்லை. பதிலுக்குப் பதில் செய்யாமலும் துவேஷ உணர்ச்சியில்லாமலும் கோபமில்லாமலும் நாம உயிர்விடத் தயாராக இருக்க வேண்டும்.

உலகின் தவிப்பு

இதுவரையில காங்கிரஸ் அறிந்துள்ள அஹிம்சைக்கும் மகத்தான வித்தியாசமிருக்கிறது என்பதைக் காண்பது வெகு சுலபம். ஆனுல், அத்தகைய அஹிம்சை தான் உண்மையானது; உலகம் அழிந்து போகாமற் காக்கவல்லதும் அதுவே. யுத்தக் கொடுமைகளினின்றும் விடுபட வேண்டுமென்று ஆவல் கொண்டு ஆனுல் அதற்கு வழி தெரியாமல் தவிக்கும் உலகுக்கு இந்தியா அஹிம்சையைப் போதிக்குமயின் மேற்படி காரியம் விரைவிலேயே நிறைவேறி விடும்.

குறிப்பு:—

மேற்படி கட்டுரையை எழுதி முடித்தற்குப் பிறகு நான் ஜவஹர்லாலின் அறிக்கையைப் பார்த்தேன், என்பால் அவர் வைத்துள்ள அன்பும், நம்பிக்கையும் எனைப்பற்றிய அவருடைய ஒவ்வொரு வாக்கியத்திலும் தொனிக்கிறது. அவரது அறிக்கையை யொட்டி மேற்படி கட்டுரையை நான் திருத்த வேண்டிய அவசியமில்லை. இருவித அபிப்பிராயங்களையும் வாசகர்கள் தனித்தனியே அறியலாம் அல்லது, இந்தப் பிரிவினையினுல் நன்மையே விளையும்.

பிஸ்கால் விற்பனை
கொழும்பு டிஸ்திரிக்கோடு
இல: 14945.
கொழும்பு செட்டித்தெரு R. M. S. P. L. S. சொக்கலிங்கம் செட்டியார் வழக்காளி
விரோதமாக
கொழும்பு பார்ள்ஸ் வீனஸ் I. K. பத்மநாதன்
2. பெண்சிவகாமிப்பிள்ளை எதிராளிகள்

மேற்சொல்லிய வழக்கில் தீர்ந்த தீர்வைரூபா 6240/- இன்னுமிதில் ரூபாய் 6000 க்கு 2-7-31 தொடக்கம் 18-11-31 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 12 வீதம் வட்டியும் அதற்குப்பின் கூடிய முழுத்தொகை இறுக்கும் வரையும் 9வீத வட்டியும் பயன்டேக்சும் சலார்களும் அறவிடும் பொருட்டு இதன்கீழ்க் காணப்படும் ஆதனத்தில் குறித்த 1ம் எதிராளிக்குரிய உரித்தையும் பிரயோசனத்தையும் 1940 ம் ஆண்டு ஆடிமாதம் 12ந்திகதி வெள்ளிக்கிழமை காணிக்குள் முற்பகல் 10மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது. அதாவது:

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கும்பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை, "சேமக்கட்டைப் புலமும் காக்கைக்குளம் வத்தையும் சேமக்கட்டைப் புலமும்" என்பவற்றுக்கு 17 குளி 15 ம் காணி அம்மன் கோவிலும் கட்டிடமும் கிணறும் பனை வடலியும் புளியமரமும் மற்றும் புரோசக்கலம், எல்லை கிழக்கு சேனதிராசா பெண் பாக்கியத்துக்கும் வசித்தி லிங்கம் பெண் செல்லம்மாவுக்குமுரிய ஆதனங்கள், வடக்கு காந்தியேசு கைம்பெண் முத்தாச்சிபிள்ளைனும் ஒழுங்கை மேற்கு பொன்னம்பலம் இராமநாதனுக்கும் மாதெனைத்தைப் பிள்ளையார் கோவிலுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சிவசிதம்பரம்பிள்ளை செல்லத்துரைவிதானைக்காரருக்கும் சேனதிராசா பெண் பாக்கியத்துக்கு முரிய ஆதனங்கள். இதில் வடக்கெல்லையருகாக ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம் நீங்கலாக மிகுதி படங்களும்.

M. Selvadurai
வடமாகாணப் பிசுக்காலுக்காக
3-7-40
Mis 70 4-7-40

பல்வைத்திய விளம்பரம்

யப்பானியப் பல் வைத்தியரான என். இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய கடைவீதியிலுள்ள திருச்செல்வம்பில்டிங்கில் 1940-ம் ஆண்டு ஜுலை 7-ந்திகதி தொடக்கம் 16-ந் திகதிவரையில் பல்வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பார்
(Mis 71. 4-7-40)

---

8 லக்ஷம் ரூபா உத்தேசத் திட்டம்

அரசாங்கத்தின் வெள்ள நிவாரணச் செலவு

சமீபத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் ஏற்பட்ட பிரவாகத்தினுல் கஷ்டமுற்ற ஜனங்களுக்கு நிவாரண மளிப்பதற்காக அரசாங்கத்தார் மொத்தம் 8 லக்ஷ ரூபா வரையிலும் செலவினங்கள் கொண்டுவரப்பட்டுவிட்டன.

இப்பொழுது தொழிற்கட்டுப்பாட்டு மந்திரி 2 லக்ஷத்திற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்தத் திட்டத்தின்படியுள்ள செலவுக்குத் தொழில் மந்திரி அரசாங்கசபையில் உபமானியம் கோருவார்.

வெள்ள நிவாரணத்திற்கு அநுமதிக்கப்படும் செலவினத்தின் பெரும்பகுதியும் பிரவாகத்தினுற் சேதமடைந்த வீடுகளைத் திருப்பக் கட்டிக்கொள்ளுவதற்கு உதவிபுரியப்படுமென்று தெரிகின்றது.

அம்பாந்தோட்டை மாத்தறை கண்டி டிஸ்திரிக்குகளிலும் சப்ரகமுவை மாகாணத்திலும் ஏற்கெனவே வெள்ள நிவாரணத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. கண்டி டிஸ்திரிக்கிலும் சப்ரகமுவையிலும் நெல்வயல்களை பெரும்பாலும் வெள்ளத்தாற் சேதமடைந்து விட்டதால் அந்த வயல்களைப் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் வேலையே பிரதானமாகக் கவனிக்கப்பட்டுவருகின்றது.

கல்வியின் இலக்கு

S. சுப்பிரமணியம் மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை

மாணவர்களுக்கிருக்கும் கல்விகற்றல், பின் அக் கல்விப்பயனைப் பெற இல்வாழ்க்கை யேற்றல் அவ்வில்வாழ்க்கையினின்றும் அன்பும் அருளும் விளக்கப்பெற்று உயிர்கட்குத் தொண்டு செய்யத் தம்மைப் பண்படுத்தல் அதன்பயனாக எவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டொழுகல் ஆகிய இவை ஒவ்வொருவர் வாழ்விலும் பூத்து மலர்ந்து காய்த்துக் கனியவேண்டுவன. ஒவ்வொருவனுடைய வாழ்வும் மாணவனாகவே ஆரம்பிக்கின்றது; ஆகவே சீவியத்துக்கின்றியமையாத சிறந்த அத்திவாரம் இப்பருவத்திலேயே போடப்படவேண்டும்; பாலப்பருவம் முடிந்ததும் பெற்றோர் பிள்ளைகளைக் கிராமப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றார்கள். சிணுங்கிய வதனம் புத்தகப் பையொடு துண்டாகிற்ப வேண்டாவெறுப்பொடு நத்தைபோலூர்ந்து மெல்லச் செல்கின்றான் பாலன். பாடசாலையில் இப்பிள்ளையை வரவேற்று ஆதரிப்பவர் ஆசிரியரே. பால்போலும் தூய்மையும் பரிசுத்தமும் நிறைந்த அக் குழந்தையின் மனம் இலகுவில் எவற்றையும் பற்றிக்கொள்ளும் இயல்புடையது; வாழ்க்கைக்கு இன்றியமையாக் குணநலன்களை விருத்தியாக்குவதற்குரிய சிறந்த பழக்கத்தையும் கல்வியையும் இக்குழந்தைக்குக் கொடுப்பவர் ஆசிரியராகின்றார். இவரின் பொறுப்பு மிகவும் மேலானது. குழந்தைக்கு இப்போது சிறந்த வழிகாட்டி ஆசிரியரே. ஆசிரியரே தனக்கு மேலானவரென்றும் அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் சொல்வதையும் செய்வதையும் அவதானித்துப் பின்பற்றுகிறது குழந்தை. ஆசிரியரின் பேச்சையும் செயலையும் பிள்ளை கவனிக்கிறது. ஒவ்வோர் பழக்கமும் குழந்தையின் மனத்தில் பதிகிறது. ஆகவே ஆசிரியர் மிகவும் மேலான தூய்மையானபழக்கவழக்கத்தை அனுட்டிப்பவராகவும் பிள்ளைகளின் பழக்கத்தில் கவனமெடுப்பவராகவும் இருக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொடுப்பதுதான் தங்கள் வேலையென்றும் அதற்காகவே தங்களுக்கு யோக்கியதாபத்திரம் கொடுக்கப் பட்டிருக்கிறதென்றும் ஆசிரியர்கள் நினைக்கப்படாது. நல்ல பழக்கவழக்கத்தை விருத்தியாக்கிச் சமூகத்தை முன்னேற்றுவதே ஆசிரியர்களது முக்கியகடமையாம்.

கிராமப் பாடசாலைகளினின்றும் கல்லூரிக்குச் செல்லும் பிள்ளைகள் இங்கு கற்றதையும் பழகியதையுமே அத்திவாரமாகக் கொண்டு மேற்கல்வி கற்கிறார்கள். கல்வியின் இலக்கு ஒவ்வொருவனையும் தன் பிற்கால சீவியத்தில் சமனாக்கிக்கொள்ளவும் எவ்வுயிரையும் தன்னுயிர்போல் நேசிப்பவனாயும் உடலாலும் மனத்தாலும் உடையவனாயும் சிறந்த வழியிலே தன் சீவியத்தை நடத்திக்கொள்பவனாயும் வாசிப்பதே. சுருக்க கூறில் ஒவ்வோர் ஆண்மகனையும் ஓர் இராமனாகவும்—ஒவ்வோர் பெண்ணையும் ஓர் சீதையாகவும் ஆக்குவதே கல்வியின் இலக்காகவேண்டும். இந்த வழியிலேயே ஆசிரியர் மாணவரைப் பயிற்றவேண்டும்; இதற்கு ஆசிரியரின் போதனையிலும் சாதனையே சிறந்தது.

ஆனால், தற்காலக் கல்வியின் இலக்கு வேறாகின்றது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் படிப்பது ஓர் உத்தியோகம் பெறுவதற்கெனவும், அப்படியான உத்தியோகத்தைக் கொடுக்கக்கூடிய கல்விப்பயிற்சியையே நாடுகின்றார்கள். தன் பிள்ளை இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியிலோ அல்லது மோட்டார்க் காரிலோ காற்சட்டை மேற்சட்டை களிசான் சப்பாத்து முதலியன அணிந்து கையில் கடிகாரமும் மூக்கிற் கண்ணாடியும் மாட்டிக்கொண்டு 'கலோ' (Hello) 'குட்மோர்னிங்' (Good Morning) 'குட் ஈவினிங்' (Good evening) என்று பேசிக்கொண்டு சீவிப்பதையே பெற்றோர் விரும்புகிறார்கள். இதுவே கல்வியின் நோக்கமென நினைக்கின்றார்கள். மாணவரும் கல்லூரியில்படிக்க ஆரம்பிக்கும் பொழுதே இப்படியான சீவியத்தையே தங்கள் இலக்காகக் கொள்கிறார்கள். ஓர் மாணவன் தான் படிப்பது அரசாங்க உத்தியோகம் பெறுவதற்கென நினைக்கிறான். தற்காலக் கல்விச்சாலைகளும் இப்படியான அடிமைத் தொழிலுக்கு மாணவர்களைத் தகுதியாக்கும் வேலைச்சாலைகளாகின்றன. இதனால் இப்போது அநேகம்படித்த வாலிபர்கள் கல்லூரிகளினின்றும் வெளியேறினதும் தங்கள் சீவியத்துக்கு உழைக்க உத்தியோகமின்றி வாழ்விலே ஏமாற்றமடைந்து போகின்றார்கள். அரசாங்கம் எத்தனைபேருக்கு வேலை கொடுக்கமுடியும்? ஆகவே எங்கள் தேசத்தில் கற்ற வாலிபர்களின் நிலை மிக இரக்கத்தக்கது. படிக்கின்ற காலந்தொட்டே தங்கள் பெற்றோரின் பணத்தில் எல்லாச் சுகபோகங்களையும் அனுபவித்துவந்தஇவர்கள் இப்போது அவ்வித ஆடம்பரங்களுக்கு வழியின்றி வேறு தொழில் செய்து சீவியம் நடத்தவும் முடியாமல் தத்தளிக்கின்றார்கள். சிலர் தவறான வழிகளில் சீவியத்தை நடத்தவும் முற்பட்டுவிட்டார்கள். சோம்பேறித்தனமும் அடிமைச் சீவியமுமே தலைவிரித்தாடுகின்றன. நீதிமன்றங்களில் நியாயதுரந்தரராகக் கடமை பார்ப்போர் அநேகர் குற்றஞ் செய்வோருக்கு உதவி புரிவதற்குத் தங்கள் சட்டநூல் அறிவை உபயோகித்து உலகத்தில் துன்மார்க்க விருத்திக்கு உதவியாகிறார்கள். எத்தனையோ படித்து உத்தியோகம் பார்ப்பவர்கள் நேர்மைக்கு மாறான வழியிலே வருவாய் பண்ணுகிறார்கள். இவ்வூழல்களுக்கெல்லாம் காரணம் படிப்பின் முதலாய நோக்கம் உத்தியோகம் பெறுவதற்கெனக் கருதியதே.

இனி, பெண்களின்கல்வியிலே அவதானிக்குமிடத்து இவர்களைப் படிப்பிக்கும் நோக்கம் ஐரோப்பிய நாகரீகப்படி ஆங்கிலம் பேசவும் ஆண்களுடன் கலந்து களியாட்டங்கள் செய்யவும் மற்றும் மேனாட்டுப் பழக்க வழக்கங்களை அனுட்டிக்கவுமே. எங்கள் தூய நாகரீகப்படி பெண்களுக்குரிய அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு முதலிய சிறந்த குணங்கள் அற்றுப்போயின. ஓர் பெண் பழைய நாகரீகப்படி இருந்தால் தற்காலப் பழக்கவழக்கமில்லையென்றும் நாட்டுப்புறத்து நாகரீகமற்ற பெண்ணென்றும் ஒதுக்கிவிடுகிறார்கள். கலியாணச் சந்தையிலும் இப்பெண்களுக்கு மதிப்புக் குறைவாம். கற்றவாலிபர் எனப்படுவோர் விரும்பமாட்டார்களாம். தலைமுறை தலைமுறையாய் இருந்த அழகான தாவணிபோன்ற உடுப்புகள் மறைந்து விட்டன. புலவர்களாலும் போற்றப்பட்ட சிறந்த அழகைக் கொடுக்கும் கூந்தல் மறைந்துவிட்டது. ஐரோப்பிய மாதரைப் போல் தலை மொட்டையாகி முகம் வெளுத்து அரை உடுப்புக் கவுனுடன் ஆடுபாவைகள் போல் நடமாடுகிறார்கள் பெண்கள். நம் பெண்களின் நிலை அடிசன் என்னும் ஆங்கில நூலாசிரியன்காலத்துப் பெண்களின் நிலையை ஒத்து இருக்கின்றது. கல்வி கற்ற பெண்கள் எனப்படுவோர் தாங்கள் ஆண்களிலும் எவ்வகையிலும் குறைவற்றவரென்றும் இன்னும் மேம்பாடுடையரென்றும் மமதைகொண்டு வீட்டுப்பணி பிள்ளைப் பராமரிப்பு முதலிய தங்களுக்குரிய வேலைகளைக் கைவிட்டு ஆடம்பரமான சீவியத்தை நாடிநிற்கிறார்கள். செகஸ்பியர் (Shakespeare) மில்றன்போன்ற ஆங்கில நூலாசிரியர்களும் கம்பன் திருவள்ளுவர் ஒளவை போன்ற தெய்வப்புலவர்களும் வகுத்துக் கூறிய ஒழுக்கெல்லாம் மாறிவிட்டன. எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி. அவர்களின் மனநிலை நீர்மேலெழுத்துப்போல் மாறும் இயல்புடையது. ஆகவே இவர்கள் எப்பொழுதும் ஆண்களின் வலிமையிலும் பாதுகாப்பிலும் தங்கியிருக்கவேண்டியவர்கள். பெண்களின் கல்வி அவர்களுக்குக் கற்பு, அறம், தண்ணளி, வீரம் முதலிய சிறந்த குணங்களைப் பயக்க வேண்டும். தன் கணவனுேடுகூடி உலகமாகிய இந்தக் கொந்தளிக்குங் கடலில் வாழ்க்கையாகிய மரக்கலத்தைச் செவ்வனே செலுத்த உதவி செய்யவேண்டும். ஓர் பெண்ணே ஒரு குடும்பத்துக்கு அரசியாகின்றாள். கணவனுக்கு மந்திரியாயும் பிள்ளைகளுக்குக் குருவாயும் வருகின்றாள். தன்னுடைய தூயகுணத்தினால் சிறந்த வீரப்புதல்வர்களை உலகுக்கீந்து சமூகத்தை ஏற்றும் பொறுப்பு பெண்களைச் சேர்ந்ததே.

தற்காலக் கல்விமுறை அவசியம் மாற்றியமைக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. பிள்ளைகள் தங்கள் 14 வயதுக்குள் சன்மார்க்கத்தைக் கொடுக்கக்கூடிய கல்வியைக் கிராமப் பாடசாலைகளிலோ அல்லது ஆரம்ப பாடசாலைகளிலோ கட்டாயமாகக் கற்றுவிடவேண்டும். கிராமப் பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்தோடு தொடர்பாகச் சன்மார்க்க கல்வியும் போதிக்கப்படவேண்டும். சமயபாடம் முக்கியமான இடத்தைப் பெறவேண்டும். இப்பாடசாலை ஆசிரியர்கள் நற்குண நற்செய்கைகள் உடையவர்களாயும் பிள்ளைகளை அவ்வழியிலே பயிற்றக்கூடிய ஆற்றல் உடையவர்களாயுமிருத்தல்வேண்டும்—இதற்கு மேற்பட்ட கல்வி அவரவர்கள் விருப்பத்திற்கேற்பக் கற்கப்படவேண்டும். தொழிற்கல்வியை அத்தியாவசியம் அரசினர் எங்கள் நாட்டில் புகுத்தல்வேண்டும். கமத்தொழில் விருத்தியாக்கப்பட்டு அதில் வாலிபர்களைப் பயிற்றவேண்டும்—கமத்தொழில் அரசினரின் முக்கிய கவனத்துக்கு வரவேண்டும். வெறும் சாதாரணபத்திரங்களையும் பட்டங்களையும் தயாரிக்கும் தொழிற்சாலைகளாகிய மிதமிஞ்சிய கல்லூரிகளெல்லாம் குறைக்கப்பட்டுத்தொழிற்கல்விச் சாலைகள் திறவப்படல்வேண்டும். இந்தியாவில் உள்ள 'வார்தா கல்வித்திட்டம்' ஓர் சிறந்த முறையாம். சட்டப்பகுதி வைத்தியப் பகுதி ஏனைய பகுதிகளுக்கு உண்மையான தகுதியுடைய ஒரு சிலர் மாத்திரம் பயிற்றப்படவேண்டும். அரசினரும் மற்றும் அதிகாரிகளும் கல்வியில் தக்க மாற்றங்களைச் செய்து சன்மார்க்கத்தை நிலைநாட்டிச் சமூகத்தை முன்னேற்றுவார்களாக.

யாழ்ப்பாண வாசிகளுக்கு ஒரு மகத்தான சந்தர்ப்பம்

பேராசிரியர் K. T. R. நம்பியார்
தங்கப்பரிசு பெற்றவர்
சோதிடத்திலும் கைரேகையிலும் கைதேர்ந்தவர்
(விவாகப் பொருத்தம் பார்ப்பதில் விசேஷ திறமை வாய்ந்தவர்)

யாழ்ப்பாணத்தில்
இருமாதங்களுக்குத் தங்கியிருப்பார்
கட்டணம் குறைவு

கலந்து ஆலோசிக்கும் நேரங்கள்
காலை 8 மணிதொடக்கம் 11 மணிவரை
பிற்பகல் 3 மணிதொடக்கம் 6 மணிவரை

தங்குமிடம்:—
29-ம் நம்பர் ஆஸ்பத்திரி ரோட், ஓல்ட் ஸ்ரோர் ரேட்டுச் சந்தி, கொம்மேஷல் ரியூட்டரிக்கு அருகாமையில், யாழ்ப்பாணம்.

Mis 69 4—8-7-40

முருகன் என் காதலன்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

களால் கூறி அன்னரை அழைத்துவா.

ஏ பலாமரமே! நீ நறுமணங் கமழும் பலாக்கனியை அழகாகக் கொண்டுள்ளாய் தான். ஆனால் அழகாகப் பழுத்துத் தொங்கும் மூன்று பலகைப்பழத்தையுடைய உனது திவ்ய சௌந்தரியக் கொப்பில், இரு காகணவாய்ப்புட்கள் இருந்து மாரன் கணைக்காகக் காதலமைப்பட்டு, மாரனைத் தம் வசப்படுத்தி நிறைந்து இங்குமெழுப்பி உற்சாகத்துடனே கூவுகின்றனவே. பேதை நான் இங்கிருப்பதை உன் அழகிய கண்களால் கண்டிருந்தும் அவ்விளங்காதற் பட்சிகளை உன் கொப்பில் வைத்திருக்கிறாயே. "நெருஞ் சனை கண்ணுக் கின்பம்" என்னும் முதுமொழி பொய்யாதிருக்க வேண்டுமென் றெண்ணி அப்பட்சிகளை வைத்து விரகத்தியை உண்டாக்கி நீ உண்மையாய் ஆனந்தமடைகிறாயா?

ஆ! அவ்வழகு வாய்ந்த பட்சிகள் உன் கொப்பில்இருந்து வசித்து உன் அழகை மிகுதிப் படுத்துகின்றன என்று சொல்லுவேன். ஆனால் கனத்த பொன்னாபரணங்கள் விளக்கப் பெற்ற ஒய்யார மயிலின்மேல் அரைப் பட்டி கட்டிக் கொண்டு, வேலைக் கையிற் பிடித்துக் கொண்டும் கம்பீரமாக வரும் குமரனை—ஞாயிறைப் பழிக்கும் வீரக் கழல் புனைந்த அமரனை—அகத்திய முனிவரின் ஞானதேசிகனை—மெய்யன்பர் விரும்புவனவெல்லாம் கொடுத்தருளும் கற்பகதருவை—பிணிமூப்புச் சாக்காடென்னும் இவை இல்லாத பேரின்பனை—தேவநாயகனை—கூவியழையாது, வெள்ளியலார் மேல் பூக்களை தொடுக்கும் மாரவேளைக் கூவிக் கூவி அழைக்கின்ற அவைகட்கு ஏக்காரணங் கொண்டு இடமளித்தாய்.

தெள்ளிய குளிர்ந்த நீரையுடைய தடாகத்தில் பாசி இருக்கும் மாசற்ற குமுதமலரிலுள்ள தேனை விரும்பியுண்ணும் பொன் வண்டே! நீயாகிலும் தலைவனைப் பிரிந்து தனித்து வாழ முடியாது, தட்டுத்தடுமாறி அலமந்து பிதற்றும் பேதைப் பெண்ணுக்காகத் திருவுளமிரங்கி, அன்னவன் சிந்தையை மயக்கிப் பின் மாயமாய மறைந்து நின்று வேடிக்கை பார்க்கும் துன்பந் துடைக்குமிறைவனை—சராசரமாயுள்ள ஆனந்தத்தையும் ஆறுங் குமரவேலனை—மாணைவனுடம்பு புள்ளல் போயுறல் இச்சை குற்றம் என்னுமிவைகளின் கட்டுப்படாதவனை—அண்ட அறிவும் பூரணானந்தமுமுள்ள செஞ்சோதியைக் கண்டு பிடித்துக் கொடுக்க மாட்டாயா?

என் ஆருயிரை—எனக்குற்ற துணையை—குளிர்ந்த பரமாய் நிரம்பிய அரிய இன்பத்தை—என் வாழ்வை—யார் அழைத்து வரப் போகிறீர்கள். வெள்ளைத் தாமரை மலரின் கொலுவிற்றிருந்து ஆரவாரமாய் ரீங்காரஞ் செய்யும் செவ்வரி படர்ந்த வண்டுகளே! உமது சிங்கார வெள்ளைத் தாமரை மலர் பூத்திருக்கும் தடாகத் தருகேயும் ஒள்ளிய தெள்ளிய வெண் மலராயிருக்கின்ற படியால் "வெள்ளைக் கிலேக் கள்ளச் சிந்தை" என்றபடி நீங்களாவது இப்பேதையைக் கண்டு திருவுள மிரங்கலாகாதா?

[இந்த ஸ்ரீமத் குமர குருபர சுவாமிகளாலியற்றப்பட்ட குமாரசுவாமியத்தைத் தழுவி எழுதப்பட்டது.]

குயின்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை — நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறாத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.
(Y. 149 2-8-39—11-8-39.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு பெ. அரு. மு. சி. முத்துச்சாமி செட்டியார் அன்பிறதர் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

நம்	உ	ரு	ஊர்	பெயர்	நகைகளின் விபரம்.
1938 டிசம்பர்					
14976	5	50	வண்கிழக்கு	சி உலகநாதபிள்ளை	சங்கிலி 1
1[illegible]9	5	136	சுழிபுரம்	க செல்லப்பா	11 வைரச்சன்னம் கட்டிய தோடு சோடி 1
14544	22	200	மண்டதீவு	சி அப்பாக்குட்டி	பதினறு வைரச்சன்னம் கட்டிய தோடு சோடி 1
14620	28	540	சுழிபுரம்	க செல்லப்பா	குண்டு இரண்டுடன் ஆறு பட்டைக் கொடி 1 மழுக்கன் சிவப்புக்கல் பதைக்கத்துடன் கெட்டிப் பூரான் அட்டியல் 1
1939 ஜனவரி					
14789	13	27	நாவலர் பள்ளிக்கூடத்தடி	சி உலகநாதபிள்ளை	மீன்காப்பு 1
14864	19	40	வேலணை கிழக்கு	க சபாபதிப்பிள்ளை	பிள்ளைக்காப்பு சோடி 1 நாட்டுக் கடுக்கன் சோடி 1
15011	29	10	கன்னாதிட்டி	நா வைத்திலிங்கம்	இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1
பெப்ரவரி					
15162	7	10	நீர்வேலி வடக்கு	கு சிவசம்பு	பென்கோர்க்கி 1
15293	17	13	நவாலிதெற்கு	கா வ சிவலிங்கம்	கல்தோடு சோடி 1
15315	19	15	வண் வடமேற்கு	க முருகேசு	கல்தோடு சோடி 1
15326	19	26	சுழிபுரம்	க செல்லப்பா	சங்கிலி 1
15415	27	10	கொக்குவில் மேற்கு	ச செல்வராசா	இமி சிலக்கல் மோதிர1
15435	28	12	வண்கிழக்கு	நா சிதம்பரநடராசா	கல் மோதிரம் 1
மார்ச்சு					
15452	2	20	சிறுப்பிட்டி	மு அப்புக்குட்டி	பிள்ளைக்காப்பு சோடி 1
15463	4	10	அராலி தெற்கு	மு வி கனகசபை	ஔவர் மோதிரம் 1 சிமிக்கிவாளி சோடி 1
15515	8	45	வண்கிழக்கு	பொ சின்னத்துரை	இமி வெள்ளைக்கல் பெண்டன் 1 குண்டுவைத்த அரைப்பவுண் 1 காப்பு சோடி 1
ஏப்ரல்					
15779	2	10	அராலிவடக்கு	அ சம்புனாதசர்மா	தாலி 1
15881	10	9	ஆனைக்கோட்டை	க சின்னத்தம்பி	கல்தோடு சோடி 1
15899	11	60	நீராவியடி	கா பொன் புத்தினியம்மாள்	சாதா சங்கிலி 1
15940	15	14	வேலணை கிழக்கு	க கந்தர்	கல்தோடு சோடி 1

விற்பனவு நிகழும் விக்கிரம ஸ்ரீ ஆனிமீ 32-ந் தேதி (15-7.40) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெக்கீல்மேஸ்தர்

Mis 68 1 & 4-7-40

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
(வி) காரியாதிகாரி.
(Y. 182. 1-11-38 to 31-10-39)

மலேறியாவுக்கு
நியாயத்துக்கு
ஒத்துக்கொள்ளக்கூடிய
மாற்று மருந்து
பைரெக்ஸ்
நீடித்தகாலமாகப் புகழ்பெற்று விளங்கும்
நம்பியிருக்கத் தகுந்த
காலவரையறைவு
குறைவான கலவை.
பெங்கால் கெமிக்கல்
கல்கத்தா, பம்பாய்.
ஏஜென்ஸ்:
தேவார் அன் கோ,
மெயின் ஸ்ட்ரீட், கொழும்பு.
(Mis 159—10-9-37)

வியாபாரத்திற்கு
அழகு
விளம்பரஞ் செய்தல்

பல் வைத்தியர்
எஸ். சாஸ்பத்திராஜ
லைசென்ஸ் பெற்ற பல்வைத்தியர்; கண் பரிசோதிக்கும் திறமை வாய்ந்தவர்.
3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (ரேகுக்கட்டிடத்துக்குக் கிட்ட)
ஆலோசனைக்குரிய காலம் முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணிவரை.
உங்கள் மூக்குக் கண்ணாடியின் ஒடுகள் அல்லது கம்பிகள் அல்லது கண்ணாடிகள் உடைந்தால், தயவுசெய்து அவற்றை மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். அவை மிகச் சரியாகவும் விரைவாகவும் திருத்திக் கொடுக்கப்படும். குறுக்கல் ஸ்பிரோ, சிலிண்டர் பிளேனோ, சிலிண்டர் ஆகியாம் விரும்பத்தக்க, தற்கால மாதிரிக்கேற்ற, அழகான கண்ணாடிகள் எம்மிடம் உண்டு. சாஸ்திர ரீதியான எத்தக் கண்பரிசோதனைக்குமேற்றதான கண்ணாடிகளும் உண்டு. பவுண்மலாம் கொடுத்த கண்ணாடிக் கம்பிகளும் நிக்கல் வெள்ளியால் செய்த கம்புகளும் மிகச் சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்ட எல்லா விதமான பிரேம்களும் எம்மிடம் உண்டு.
டக்தர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு அம்சமும் மிக்க கவனமாகவும் திறமையாகவும் பூர்த்தி செய்யப்படும்.
எங்கள் விலைகுறைவு. நியாயமானது
Y 19 2-5 o 1-5-41

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரேருப்மைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 50. 3-4-39 3-3-41

சலரோகம்! தொய்வு!
(உத்தரவாதத்துடன் குணம்தருவது)
முன்பணமனுப்பினால் வி. பி. செலவு இல்லை.
1 சலரோகத்திற்கு அப்ரக் செந்தூரம் சாஸ்வதமானகுணம்தருவது 12-0-0
2 தொய்விற்கு சாஸ்வதமானகுணம் தருவது கால்சியம் சேர்ந்த ஏமது சொர்ணகல்பம் 15-0-0
விபரத்திற்கு உடனே எழுதவும்.
Dr. K. S. பரிபூரணைந்தா
ஸ்ரீராமகிருஷ்ண சித்தவைத்தியசாலை
இராமேஸ்வரம்
ஏழைகட்கு இராமேஸ்வரத்தில் இலவச சிகிச்சை அளிக்கப்படும்.
வி 8-4-40—7-4-41

விளம்பர விகிதம்
முதன்முறைக்கு
ஒரங்குலம் ரூபா 10.00 அரைக்காலம் ரூபா [illegible]
கால்காலம் ரூபா 4.00 ஒரு அங்குலம் ரூபா 1.00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
[illegible]

பத்திரக்கிரயம்
வருடம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசங்க எல்லைக்குள்
தமிழ் ரூபா 5.00 இங்கிலீஸ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஸ் தமிழும் 12.00
தொலைப்பகுதி 9.00 இங்கிலீஸ் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினாலன்றிக் கவனிக்கப்படமாட்டா

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, resid.ng at Vannarponnai East, Jaffna for and on behalf of the Proprietors the Saiva paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna on Thursday 4th July 1940.